# புதிய ஏற்பாட்டில் ராஜ்யமும் உடன்படிக்கையும்

**பாடம் மூன்று**

புது உடன்படிக்கை

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை  வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும்  எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால்  501(c)(3)  கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற  பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து  www.thirdmill.org. யைப்  பார்வையிடவும்.

# பொருளடக்கம்


அறிமுகம் ..... 1

ராஜ்யத்தின் நிர்வாகம் ..... 2

**உடன்படிக்கை பிரதிநிதிகள் ..... 4**

பழைய ஏற்பாடு ..... 5

புது உடன்படிக்கை ..... 5

**பொருத்தமான கொள்கைகள் ..... 6**

பழைய ஏற்பாடு ..... 7

புது உடன்படிக்கை ..... 8

**இயற்கையான வளர்ச்சி ..... 11**

பழைய ஏற்பாடு ..... 11

புது உடன்படிக்கை ..... 12

தொடர்புகளின் இயக்கவியல் ..... 16

**தெய்வீக தயவு ..... 17**

பழைய ஏற்பாடு ..... 17

புது உடன்படிக்கை ..... 19

**தேவப்பற்றின் பரீட்சைகள் ..... 22**

பழைய ஏற்பாடு ..... 23

புது உடன்படிக்கை ..... 25

**விளைவுகள் ..... 29**

பழைய ஏற்பாடு ..... 29

புது உடன்படிக்கை ..... 30

முடிவுரை ..... 34

# புதிய ஏற்பாட்டில் ராஜ்யமும் உடன்படிக்கையும்

பாடம் மூன்று

புது உடன்படிக்கை

## அறிமுகம்

கிறிஸ்துவின் சீஷர்கள் பல பழக்கமான வெளிப்பாடுகளை வெவ்வேறு வழிகளில் எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதை நீங்கள் எப்போதாவது கவனித்தது உண்டா? ”புது உடன்படிக்கை” என்கிற சொல் பயன்பாட்டிற்கு இது நிச்சயமாக பொருந்தும். “இந்தப் பாத்திரம் புது உடன்படிக்கையாயிருக்கிறது” – என்று இயேசு சொன்னதை ஒவ்வொரு முறை நாம் கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கடைப்பிடிக்கும்போதும் சொல்கிறோம். உலகெங்கிலும் இருக்கிற உள்ளூர் சபைகளில் ”புது உடன்படிக்கை” என்ற வார்த்தைகளுடைய பெயர்கள் உள்ளன. ஆனால் பெரும்பாலான கிறிஸ்தவர்களிடம் “புது உடன்படிக்கை என்றால் என்ன?” என்கிற கேள்வியை கேட்டால் நீங்கள் கேட்கும் நபர்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல பல பதில்களைப் பெறுவீர்கள். சில நேரங்களில் இது போன்ற வேறுபாடுகள் பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. ஆனால் இந்தப் பாடத்தில் நாம் பார்ப்பது போல, புது உடன்படிக்கையைக் குறித்ததான கருத்து புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களை மிகவும் பாதித்தது, அவர்களின் இறையியலை “புது உடன்படிக்கை இறையியல்” என்று நாம் கூறலாம். ஆகையால் புது உடன்படிக்கை என்ன என்பதைப் புரிந்துகொள்ள நம்மால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும்.

*புதிய ஏற்பாட்டில் ராஜ்யமும் உடன்படிக்கையும்* என்கிற தொடரில் இது மூன்றாம் பாடம் ஆகும். இந்தப் பாடத்திற்கு “புது உடன்படிக்கை” என்ற தலைப்பை வைத்துள்ளோம். இந்தப் பாடத்தில் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் தங்களது மிக முக்கியமான இறையியல் கண்ணோட்டங்களில் சிலவற்றை வடிவமைக்க புது உடன்படிக்கையின் கருத்தை எவ்வாறு நம்பியிருந்தார்கள் என்பதை ஆராய்வோம்.

நம் பாடம் இரண்டு முக்கிய பகுதிகளாக பிரிக்கப்படும். புது உடன்படிக்கை தேவனுடைய ராஜ்ய நிர்வாகத்தை எவ்வாறு வகைப்படுத்தியது என்பதை முதலில் பார்ப்போம். இரண்டாவது, புது உடன்படிக்கை தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்கும் இடையிலான சில தொடர்புகளை எவ்வாறு வெளிப்படுத்துகிறது என்பதை ஆராய்ந்து பார்ப்போம். புது உடன்படிக்கையின் மூலம் தேவனுடைய ராஜ்ய நிர்வாகம் என்ன என்பதை முதலில் பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# ராஜ்யத்தின் நிர்வாகம்

நாம் பொதுவாக “உடன்படிக்கை” என்று மொழிப்பெயர்க்கும் எபிரெய வார்த்தை *“பெரித்”* *ஆகும்*. பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிப்பெயர்ப்பில், இந்த எபிரெய வார்த்தை *“டியாதேக்கே”* என்று மொழிபெயர்க்கப்பட்டு உள்ளது. புதிய ஏற்பாட்டில் *”டியாதேக்கே”* என்கிற வார்த்தை ”உடன்படிக்கை” என்றே மொழிப்பெயர்க்கப்படுகிறது. *பெரித்* மற்றும் *டியாதேக்கே* ஆகிய இரண்டும் ”ஒரு முழுமையான ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை” என்பதன் அர்த்தங்களையே கொண்டுள்ளன. சமமாக உள்ளவர்கள் உடன்படிக்கை செய்துகொள்வதை வேதாகமத்தில் பார்க்கிறோம். ராஜாக்களுக்கும் அவர்களுடைய குடிமக்களுக்கும், ராஜாக்களுக்கும் பிற ராஜாக்களுக்கும் இடையிலான உடன்படிக்கைகளையும் நாம் பார்க்கிறோம். தேவன் தேசங்களுடனும் ஜனங்களுடனும் உடன்படிக்கை செய்தார். இந்தப் பாடத்தில், ஜனங்களுடன் தேவன் செய்து கொண்ட உடன்படிக்கைகளில், குறிப்பாக கிறிஸ்துவில் அவர் செய்த புது உடன்படிக்கையில் நாம் கவனம் செலுத்துவோம்.

தேவனுடைய வேதாகம உடன்படிக்கைகளைப் பற்றிய நமது புரிதலில் மிக முக்கியமான முன்னேற்றங்களில் ஒன்று இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் நடந்தது என்பதை அறிவது முக்கியம். இந்த நேரத்தில், பல வேத வல்லுநர்கள் வேதாகம உடன்படிக்கைகளை பொதுவாக ”சர்வாதிகார ராஜா-சேவிக்கிற ராஜா ஒப்பந்தங்கள்” என்று அழைக்கப்படும் பண்டைய கிழக்கத்திய ஆவணங்களுடன் ஒப்பிடத் தொடங்கினார்கள். இந்த ஆவணங்கள் பழைய ஏற்பாட்டு காலங்களில் நாடுகளிடையே சர்வதேச ஒப்பந்தங்களாக இருந்தன. இந்த உடன்படிக்கைகளில், சர்வாதிகார ராஜாக்கள் அல்லது பெரிய மன்னர்கள், ஒப்பந்தங்கள் மூலமாக சேவிக்கிற ராஜாக்களை அல்லது சிறிய மன்னர்களை தங்கள் அதிகாரத்தின் கீழ் நிர்வகித்தனர். நாம் பார்க்கப் போவது போல், வேதாகம உடன்படிக்கைகளுக்கும் இந்த சர்வாதிகார ராஜா - சேவிக்கிற ராஜா ஒப்பந்தங்களுக்கும் இடையிலான ஒற்றுமைகள் வேதத்தில் தேவனுடைய உடன்படிக்கைகள் அவருடைய ராஜ்யத்தின் விவகாரங்களை நிர்வகிப்பதற்கான முதன்மை வழிமுறைகளாக இருந்தன என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

> வேதத்தில் இரண்டு வெவ்வேறு வகையான ஒப்பந்தங்கள் இருந்தன என்பதை பழைய ஏற்பாட்டில் குறிப்பாக ஆதியாகமம் புத்தகத்தில் காணமுடியும். முதலாவது சமமான திறன், சமமான அதிகாரம் கொண்ட இரு நபர்களிடையே உருவாகக்கூடிய ”சமநிலை ஒப்பந்தத்தை” காண்கிறோம், அதில் அவர்கள் இருவருக்கும் நன்மை பயக்கும் ஒரு ஒப்பந்தத்தை உருவாக்குகிறார்கள். ஆபிரகாம் மற்றும் அபிமெலேக்கை உதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள்... நாம் காணும் இரண்டாவது வகையான ஒப்பந்தம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உண்மையில் பண்டைய கிழக்கத்திய பகுதியில் உள்ள "சர்வாதிகார ராஜாவுக்கும் சேவிக்கிற ராஜாவுக்குமிடையே உள்ள ஒப்பந்தம்" ஆகும், இது வழக்கமாக சம பலமற்ற நபர்களுக்கு இடையில் நடைபெறுகிறது, இதில் பலமுள்ளவரும் பெரியவருமாயிருக்கிறவர் பெரும்பாலும் உங்களை தோற்கடித்து வென்றவர், உங்களுடன் ஒரு உறவில் இருக்க விரும்புகிறார், அதில் பெரியவர் சிறியவரிடமிருந்து அனைத்து நன்மைகளையும் வரியாகப் பெறுகிறார். எனவே பெரும்பாலும் சர்வாதிகார ராஜாவுக்கு சேவிக்கிற ராஜா நாங்கள் விசுவாசமாயிருப்போம் என்கிற உறுதிமொழியை அளிக்க வேண்டும் … ஆனால் சேவிக்கிற ராஜாவுக்கு இதில் ஒரு நன்மை இருக்கிறது, வேறு பெரிய ராணுவம் தங்களுக்கு எதிராக படையெடுத்து வரும்போது சர்வாதிகார ராஜாவின் ராணுவம் உதவிக்கு வரும். அதனால் அவர்களுக்கு அந்த வகையான பரஸ்பர பாதுகாப்பும் உறவும் இருந்தது.

– Dr. டேனியல் எல். கிம்

ராஜாக்களைப் பொறுத்தவரை கொடுங்கோல் ஆட்சியாளர்களாகவும், தங்கள் குடிமக்களை ஒடுக்கும் பணக்கார மேலதிகாரிகளாகவும் தான் இருப்பார்கள் என்று நாம் பெரும்பாலும் கருதுகிறோம். ஆனால் உண்மையில், இயேசுவின் காலத்திலும் அதற்கு முந்தைய பண்டைய கிழக்கத்திய சூழலிலும் அரசாட்சியானது பெரும்பாலும் உடன்படிக்கை என்ற கருத்தின் அடித்தளமாகவே இருந்தது. ஆகவே, ஒப்பந்தங்கள் மற்றும் பண்டைய ஒப்பந்தங்கள் நடைபெற்றதற்கு சான்றுகள் உள்ளன. அதில் ஒரு ராஜா, அல்லது ஒரு மேலதிகாரி, அல்லது சர்வாதிகார ராஜா சிலருடன் ஒப்பந்தம் செய்வது வழக்கம். பின்னர் அவருடைய ஊழியர்களாகவோ அல்லது அவரது சேவகர்களாகவோ அவர்கள் ஆகிவிடுவார்கள், மேலும் அவர்களுக்கிடையிலுள்ள உறவு எப்படியிருக்க வேண்டும் என்று வரையறுக்கப்படும். சர்வாதிகார ராஜாவால் ஒரு சில வரையறைகள் வகுக்கப்பட்டு உறவு சரியாக செல்வதற்கான வழிவகைகள் செய்து தரப்படும். மேலும் அவர், "நான் உங்களுக்கு பாதுகாப்பை வழங்குவேன், நான் உங்களுக்கு செழிப்பை கொடுப்பேன், உங்கள் பயிர்களில் ஒரு பகுதியை என்னிடம் பகிர்வதாலும், உங்கள் விசுவாசத்தை எனக்குக் காட்டுவதாலும், மற்ற அரசர்களுடனோ அல்லது

மேலதிகாரிகளுடனோ கூட்டணிகளை உருவாக்காததாலும் அதற்கு ஈடாக என் அடையாளத்தை உங்களுக்கு வழங்குவேன்” என்று இதுபோன்ற ஒன்றைச் சொல்வார். அரசர்களுடனோ அல்லது மேலதிகாரிகளுடனோ கூட்டணிகளை உருவாக்காததாலும் அதற்கு ஈடாக என் அடையாளத்தை உங்களுக்கு வழங்குவேன்.” எனவே இது ஒரு அர்த்தத்தில் பார்க்கும்போது ஒரு பரஸ்பர வகையான சூழ்நிலையாக இருந்தது. இந்த வகையான ஒப்பந்தத்தின் அடிப்படையில் ராஜ்யம் மற்றும் உடன்படிக்கையின் தன்மை பற்றி சிந்திக்கத் தொடங்கினால், பழைய ஏற்பாட்டின் பல்வேறு பகுதிகள் இந்த சர்வாதிகார ராஜா ஒப்பந்தங்களின் சரியான கூறுகளுடன் மிகத் துல்லியமாக ஒத்துப்போகின்றன என்பதை நாம் காணலாம்.

– Mr. பிராட்லி டி. ஜான்சன்

தேவனின் ராஜ்ய நிர்வாகத்தை மூன்று முக்கிய வழிகளில் பார்ப்போம். உடன்படிக்கை பிரதிநிதிகளின் முக்கியத்துவத்தை நாம் முதலில் கவனிப்போம். இரண்டாவது, தேவனுடைய ராஜ்யத்திற்கான பொருத்தமான கொள்கைகளில் தேவனின் உடன்படிக்கைகள் எவ்வாறு கவனம் செலுத்தின என்பதைப் பார்ப்போம். மூன்றாவது, தேவன் தனது உடன்படிக்கைக் கொள்கைகளின் இயல்பான வளர்ச்சியின் மூலம் தனது ராஜ்யத்தை எவ்வாறு நிர்வகித்தார் என்பதைப் பார்ப்போம். தேவனுடைய உடன்படிக்கை பிரதிநிதிகளை முதலில் பார்ப்போம்.

## உடன்படிக்கை பிரதிநிதிகள்

நாம் ஏற்கனவே பார்த்தபடி, பண்டைய சர்வாதிகார ராஜாக்கள் தங்கள் ராஜ்யங்களை பலம் குறைந்த அரசர்களுடனோ அல்லது சேவிக்கிறவர்களுடனோ ஒப்பந்தம் செய்து நிர்வகித்தார்கள். இந்த சேவிக்கிற மன்னர்கள் தங்கள் தேசங்களை பிரதிநிதித்துவப்படுத்தினர், மேலும் தங்கள் ராஜ்யங்களை சர்வாதிகார ராஜாக்களுக்கு பணிந்து இருக்கும்படி பார்த்துக் கொண்டனர். இதேபோல், தேவன் தம்முடைய உடன்படிக்கை மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு தேர்ந்தெடுத்த மனிதர்கள் மூலமாக உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதன் மூலம் தனது ராஜ்யத்தை நிர்வகிக்கிறார்.

நாம் என்ன சொல்ல வருகிறோம் என்பதைப் பார்க்க, பழைய ஏற்பாட்டில் தேவன் எவ்வாறு உடன்படிக்கை பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தார் என்பதை முதலில் பார்ப்போம். பிறகு புது உடன்படிக்கையைப் பற்றி பார்ப்போம். பழைய ஏற்பாட்டிலிருந்து தொடங்கலாம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## பழைய ஏற்பாடு

தேவன் பழைய ஏற்பாட்டு காலங்களில்  உடன்படிக்கை பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தார் என்பதைக் காண்பது கடினமான காரியம் அல்ல. தேவன் ஆதாமுடன் முதல் வேதாகம உடன்படிக்கையை ஏற்படுத்தினார் என்று ஆதியாகமம் 1-3 மற்றும் ஓசியா 6:7 இரண்டும் சுட்டிக்காட்டுகின்றன. ஆதியாகமம் 6:18 மற்றும் ஆதியாகமம் 9:9-17 ஆகியவை நோவாவுடன் தேவன் செய்து கொண்ட உடன்படிக்கையைக் குறிக்கின்றன. ஆதியாகமம் 15-17 இல் தேவன் ஆபிரகாமுடன் ஒரு உடன்படிக்கை செய்தார். யாத்திராகமம் 19-24 தேவன் மோசேயை தனது உடன்படிக்கை பிரதிநிதியாக தேர்ந்தெடுத்தார் என்பதைக் குறிக்கிறது. கடைசியாக சங்கீதம் 89 மற்றும் 132 ஆகியவை  தாவீதுடனான தேவனின் உடன்படிக்கையைக் குறிக்கின்றன.

தேவன் இந்த  உடன்படிக்கைகளை ஏற்படுத்தின போது இந்த மனிதர்கள் ஒவ்வொருவரையும் வித்தியாசமாகக் கையாண்டார். ஆனால் அவர்கள் அனைவரும் தேவனுடைய  பரலோக அரச நீதிமன்றத்தின் நியாயத்தீர்ப்புகளில் தேவனுக்கு முன்பாக மற்றவர்களை பிரதிநிதித்துவப்படுத்தினர். ஆதாம் மற்றும் நோவாவுடனான உடன்படிக்கைகள் ”உலகளாவிய உடன்படிக்கைகள்” என்று அழைக்கப்படுகின்றன, ஏனென்றால் ஆதாமும் நோவாவும் எல்லா மனிதர்களையும் தேவனுடைய  உடன்படிக்கை மக்களாக பிரதிநிதித்துவப்படுத்தினர். ஆபிரகாம், மோசே மற்றும் தாவீதுடனான உடன்படிக்கைகள் ”தேசிய உடன்படிக்கைகள்” என்று அழைக்கப்படுகின்றன. இந்த உடன்படிக்கைகளில், இந்த மனிதர்கள் இஸ்ரவேல் தேசத்திற்கு பிரதிநிதிகளாக இருந்தார்கள், புறஜாதியார் இஸ்ரவேலுக்குள்  உடன்படிக்கை மக்களாக அங்கீகரிக்கப்பட்டனர்.

பழைய ஏற்பாட்டின் உடன்படிக்கை பிரதிநிதிகளை மனதில் வைத்து, புது உடன்படிக்கையை தேவன் ஒரு உடன்படிக்கை பிரதிநிதி மூலம் எவ்வாறு நிர்வகித்தார் என்பதைப் பார்ப்போம்.

## புது உடன்படிக்கை

கிறிஸ்துவை புதிய ஏற்பாடு  புது உடன்படிக்கை பிரதிநிதியாக மீண்டும் மீண்டும் அடையாளம் காட்டுகிறது. தேவன் தம்முடைய சபையின் சார்பாக அவரை விசேஷித்த வழிகளில் ஈடுபடுத்தினார்  – ஒவ்வொரு யூதனையும் புரஜாதியையும்  தேவன் கிறிஸ்துவுடன் அடையாளப்படுத்துகிறார். எபிரெயர் 9:15 இல் நாம் வாசிக்கிறது போல:

> அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார் (எபிரெயர் 9:15).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ரோமர் 8:34 மற்றும் 1 தீமோத்தேயு 2:5-6 போன்ற வேத பகுதிகளிலும் இதே போன்ற போதனைகள் காணப்படுகின்றன.

கிறிஸ்துவே சபைக்கான தேவனின் தேர்ந்தெடுக்கப்பட்ட உடன்படிக்கை பிரதிநிதி என்பது புதிய ஏற்பாட்டு இறையியலின் மிக முக்கியமான பண்புகளில் ஒன்றைப் புரிந்துகொள்ள உதவுகிறது. பல வேதாகம மொழிப்பெயர்ப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளபடி, புதிய ஏற்பாட்டு இறையியல் “கிறிஸ்துவை மையப்படுத்தியது” ஆகும். வேறு விதத்தில் கூறினால், புதிய ஏற்பாட்டு இறையியலின் ஒவ்வொரு அம்சமும் கிறிஸ்துவின் ஆள்த்துவம் மற்றும் கிரியையுடன் நெருக்கமாக பிணைக்கப்பட்டுள்ளது. இது ஏன் உண்மையாக இருக்கிறது? உதாரணமாக, இரட்சிப்புக்காக நாம் இயேசுவை விசுவாசிக்க வேண்டும் என்று புதிய ஏற்பாடு ஏன் போதிக்கிறது? ஏன் இயேசுவின் நாமத்தில் ஜெபம் செய்யவும் பிறருக்கு இரக்கம் காட்டவும் வேண்டும்? சபை ”கிறிஸ்துவின் சரீரம்” என்று ஏன் அழைக்கப்படுகிறது? பதில் தெளிவாக இருக்கிறது. புதிய ஏற்பாட்டு இறையியலில் கிறிஸ்து இந்த முக்கிய பாத்திரத்தை வகிக்கிறார், ஏனென்றால் தேவன் புது உடன்படிக்கையில் வாழ்க்கையின் ஒவ்வொரு பரிமாணத்தையும் கிறிஸ்துவின் மூலம் சபையின் பிரதிநிதியாக நிர்வகிக்கிறார். புதிய ஏற்பாட்டு இறையியலின் இந்த அம்சத்தை கவனிக்காமல் இருப்பது, அதன் மிக முக்கியமான பண்புகளில் ஒன்றை இழப்பது போலாகும்.

தேவன் தனது ராஜ்யத்தை உடன்படிக்கை பிரதிநிதிகள் மூலமாகவும், குறிப்பாக புது உடன்படிக்கையில் கிறிஸ்துவின் மூலமாகவும் நிர்வகித்ததைக் கண்ட நாம், தேவனுடைய ராஜ்ய நிர்வாகத்தின் இரண்டாவது அம்சமான, வேதாகம வரலாற்றின் வெவ்வேறு காலங்களுக்காக வேதாகம உடன்படிக்கைகள் நிறுவிய பொருத்தமான கொள்கைகளுக்கு நேராக நாம் திரும்ப வேண்டும்.

## பொருத்தமான கொள்கைகள்

அனைத்து பண்டைய கிழக்கத்திய நாடுகளில் சர்வாதிகார ராஜா-சேவிக்கிற ராஜா ஒப்பந்தங்கள் பொதுவான கூறுகளைக் கொண்டிருந்தன, ஆனால் அவை பல வழிகளிலும் வேறுபட்டன. இதற்குக் காரணம், ஒவ்வொரு சர்வதேச ஒப்பந்தத்திற்கும் பொருத்தமான ஒவ்வொரு பிரச்சனையையும் ஒவ்வொரு தனிப்பட்ட ஒப்பந்தமும் குறிப்பிட்டது. அதேபோல், தேவனின் உடன்படிக்கைகள் அனைத்தும் பொதுவானவைகளாக இருக்கின்றன, ஆனால் ஒவ்வொரு உடன்படிக்கையின் கொள்கைகளும் வேதாகம வரலாற்றின் வெவ்வேறு கட்டங்களில் முக்கியமான குறிப்பிட்ட சிக்கல்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளன.

தேவனுடைய உடன்படிக்கைகளின் கொள்கைகள் வெவ்வேறு வரலாற்று நிலைகளுக்கு எவ்வாறு பொருத்தமானவை என்பதைப் பார்க்க,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நாம் மீண்டும் பழைய ஏற்பாட்டு உடன்படிக்கைகளையும், பின்னர் புது உடன்படிக்கையின் கொள்கைகளையும் பார்ப்போம். முதலில் பழைய ஏற்பாட்டு உடன்படிக்கைக் கொள்கைகளைப் பார்ப்போம்.

## பழைய ஏற்பாடு

பழைய ஏற்பாட்டு உடன்படிக்கைகளின் விதிமுறைகளை தெளிவாக வாசிப்பதால் தேவனுடைய ராஜ்யத்தின் குறிப்பிட்ட கால கட்டங்களுக்கு பொருத்தமான கொள்கைகளில் கவனம் செலுத்த முடியும்.

ஆதாமுடன் தேவன் செய்த உடன்படிக்கை “அஸ்திபாரங்களின் உடன்படிக்கை” என்று அழைக்கப்படுகிறது. இது தேவனுடைய ராஜ்யத்தின் குறிக்கோள்களையும், பாவம் உலகத்திற்குள் நுழைவதற்கு முன்னும் பின்னும் அவருடைய ராஜ்யத்தில் மனிதர்களின் பங்கு எப்படி இருந்தது என்பதையும் வலியுறுத்தியது.

ஜலப்பிரளயத்திற்குப் பிறகு, தேவன் நோவாவுடன் ஒரு உடன்படிக்கை செய்தார், அதை ”ஸ்திரத்தன்மையின் உடன்படிக்கை” என்று அழைக்கலாம். இந்த உடன்படிக்கை பாவமுள்ள மனிதகுலம் தேவனுடைய ராஜ்ய நோக்கங்களுக்கு சேவை செய்யக்கூடிய பாதுகாப்பான சூழலாக இயற்கையின் ஸ்திரத்தன்மையை மையமாகக் கொண்டது.

ஆபிரகாமின் உடன்படிக்கையை “இஸ்ரவேலின் தெரிந்தெடுத்தலுக்கான உடன்படிக்கை” என்று நாம் குறிப்பிடலாம். இது தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட இஸ்ரவேல் ஜனங்களுக்கு அவர் அளித்த சலுகைகள் மற்றும் பொறுப்புகளில் கவனம் செலுத்தியது.

மோசேயுடன் தேவன் செய்த உடன்படிக்கை பெரும்பாலும் ”பிரமாண உடன்படிக்கை” என்று அழைக்கப்படுகிறது, ஏனென்றால் இஸ்ரவேல் கோத்திரத்தாரை ஒரு தேசமாக ஒன்றிணைத்ததால் அது தேவனுடைய பிரமாணத்தில் கவனம் செலுத்தியது. இந்த உடன்படிக்கையால், தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு வாக்குத்தத்தம் செய்த தேசத்தை நோக்கி அவர்களை அழைத்துச் சென்றார்.

கடைசியாக, தாவீதின் உடன்படிக்கையை “ராஜ்யத்தின் உடன்படிக்கை” என்று நாம் கருதலாம். இந்த உடன்படிக்கை இஸ்ரவேலை ஒரு வலிமையுள்ள ராஜ்யமாக நிலைநிறுத்தியதுடன், இஸ்ரவேலை ராஜ்ய சேவையில் வழிநடத்துவதற்கு தாவீதின் அரச வம்சம் எவ்வாறு இருந்தது என்பதையும் வலியுறுத்தியது.

பழைய ஏற்பாட்டில் உடன்படிக்கைகளால் நிறுவப்பட்ட பொருத்தமான கொள்கைகளை நாம் கருத்தில் கொள்ளும்போது, புது உடன்படிக்கை புது உடன்படிக்கை யுகத்திற்கு பொருத்தமான ராஜ்யக் கொள்கைகளையும் நிறுவியிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட வேண்டிய அவசியமில்லை.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## புது உடன்படிக்கை

புது உடன்படிக்கை வேதாகம வரலாற்றின் கடைசி காலக்கட்டத்தில் வருகிறது – ஆதாம், நோவா, ஆபிரகாம், மோசே மற்றும் தாவீது ஆகியோருடன் தேவன் செய்த உடன்படிக்கைகளுக்குப் பிறகு அது வருகிறது. இதனால் புது உடன்படிக்கை ”நிறைவேறுதலின் உடன்படிக்கை” என்று அழைக்கப்படுகிறது. ஆகவே இது கடந்த கால தோல்விகளை மாற்றியமைக்க புதிதாக உருவாக்கப்பட்ட கொள்கைகளை நிறுவி கிறிஸ்துவில் தேவனுடைய ராஜ்ய நோக்கங்களை நிறைவு செய்கிறது அல்லது பூரணப்படுத்துகிறது.

புது உடன்படிக்கை எரேமியா 31:31 இல் முதன்முறையாக வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது, அங்கு இந்த வார்த்தைகளைப் வாசிக்கிறோம்:

> இதோ, ”நாட்கள் வருமென்று” கர்த்தர் சொல்லுகிறார், ”அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன்” (எரேமியா 31:31).

இந்த வசனத்தின் பெரிய சூழலில், “நாட்கள் வரும்” என்ற சொற்றொடர் இஸ்ரவேலின் சிறையிருப்புக்கு பிந்தைய காலத்தைக் குறிக்கிறது. முந்தைய பாடத்தில் நாம் பார்த்தது போல, கிறிஸ்தவ நற்செய்தியின் செய்தி – அல்லது ”சுவிசேஷத்தின்” செய்தி – தேவனுடைய ராஜ்யம் அதன் இறுதியான உலகளாவிய வெற்றியை இஸ்ரவேலின் சிறையிருப்புக்குப் பின் அடையும் என்பதாகும். ஆகையால் புது உடன்படிக்கையின் முதல் குறிப்பிலிருந்து, தேவனுடைய ராஜ்யத்தின் வெற்றிகரமான நிறைவேற்றத்துடன் அதன் தொடர்பைக் காண்கிறோம்.

இந்த காரணத்திற்காக, எரேமியா 31:33-34 இல், புது உடன்படிக்கையின் கொள்கைகளையும், கிறிஸ்துவில் ராஜ்யத்தின் இந்த கடைசி கட்டத்திற்கு பொருத்தமான கொள்கைகளையும் தேவன் வெளிப்படுத்தினார். தேவன் என்ன சொன்னார் என்பதைக் கவனிக்கவும்:

> அந்நாட்களுக்குப்பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது … நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதுவேன். நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: ”கர்த்தரை அறிந்துகொள்” என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் … நான்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன் (எரேமியா 31:33-34).

புது உடன்படிக்கை தேவனுடைய ராஜ்யத்தை அதன் இறுதி முடிவுக்குக் கொண்டுவரும் என்பதை இந்த பகுதியில் கவனியுங்கள், “[தேவன்] [அவருடைய ஜனங்களின்] துன்மார்க்கத்தை மன்னிப்பார், மேலும் அவர்கள் செய்த பாவங்களை இனி நினைவில் கொள்ள மாட்டார்.” தேவனுடைய மக்களுக்கான இறுதி, நித்திய ஆசீர்வாதங்களின் இந்த நேரத்தில், ”[அவர்] [அவருடைய] பிரமாணத்தை அவர்கள் மனதில் வைத்து அதை அவர்கள் இருதயங்களில் எழுதுவார்.” உண்மையில், புது உடன்படிக்கையில் உள்ள *ஒவ்வொரு* நபருக்கும் இதை உண்மையாக்குவதாக தேவன் வாக்குத்தத்தம் செய்தார். அவர் கூறியது போல், ”அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள்.”

இப்போது உபாகமம் 10:16 மற்றும் எரேமியா 4:4 போன்ற வேத பகுதிகளில், அவருடைய உடன்படிக்கைகளுடனான வெளிப்புற தொடர்பைத் தாண்டி, அவர்களுடைய இருதயங்களை விருத்தசேதனம் செய்ய இஸ்ரவேல் தேசத்தை தேவன் அடிக்கடி அழைத்தார். வேறு வார்த்தைகளில் கூறினால், அவர்கள் அவருடைய பிரமாணத்தை தங்கள் இருதயங்களில் எழுதுவதன் மூலம் அவரை ஆழமாக நேசிக்க வேண்டும். ஆனால் தேவன் தம்முடைய உடன்படிக்கை மக்கள் *அனைவருக்கும்* இது ஒரு யதார்த்தமாக இருக்கும் வகையில் புது உடன்படிக்கை யுகத்தின் கொள்கைகளில் தலையிடுவதாக உறுதியளித்தார்.

> இயேசுவின் உயிர்த்தெழுதல் மற்றும் பரம் ஏறுதலுக்குப் பிறகு, தேவனுடைய ராஜ்யத்தின் வடிவம் அப்படியே இருந்தது, தேவன் தம்முடைய ஜனங்களை அவருடைய இடத்தில் இருந்து ஆளுகிறார், ஆனால் அது எதைப் போல இருந்தது என்பது எல்லாவற்றையும் மாற்றியது. தேவனுடைய வலது பாரிசத்தில் இயேசு அமர்ந்திருப்பதன் முக்கியமான விஷயம் என்னவென்றால் - அப்போஸ்தலனாகிய பேதுரு அப்போஸ்தலருடைய நடபடிகள் 2 இல் பெந்தெகொஸ்தே நாளில் பிரசங்கிக்கிறது போல – யோவேல் புத்தகத்தில் தீர்க்கதரிசனம் சொல்லப்பட்டபடி அவர் தம்முடைய பரிசுத்த ஆவியானவரை தம்முடைய ஜனங்கள் மீது ஊற்றினார். யூதர்களிலும் – ஆச்சரியப்படும் விதத்தில் ஆவியானவர் – புறஜாதிகளிலும் வாசம் செய்தார். தேவனுடைய ராஜ்யம் இனி ஆபிரகாமின் சந்ததியினரான இஸ்ரவேல் ஜனங்களை மட்டும் கொண்டிருக்காது என்பதற்கான அறிகுறி இதுவாகும். ரோமர் 4 இல் அப்போஸ்தலனாகிய பவுல் சொல்வது போல் விசுவாசம் உள்ளவர்களே



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆபிரகாமின் சந்ததியினர் ஆவார்கள். எனவே,தேவனுடைய ராஜ்யம் என்பது ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும், தேசத்திலிருந்தும், மொழியிலிருந்தும் வருகிற மக்களால் ஆனது; கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் ஆவியானவரைப் பெறுவான், ஆவியானவரைக் கொண்டிருக்கிற எவனிலும் தேவன் வாழ்கிறார், அவர்களுடைய வாழ்க்கையில் ஆளுகை செய்கிறார்.

– Dr. கான்ஸ்டன்டைன் ஆர்.காம்ப்பெல்

நம்முடைய முந்தைய பாடத்தில் பார்த்தபடி, புது உடன்படிக்கை யுகம் காலப்போக்கில் மூன்று கட்டங்களில் வெளிப்படும் என்று இயேசு போதித்தார். முதலாவது, கிறிஸ்துவின் முதல் வருகையில் உடன்படிக்கையின் தொடக்கம் இருந்தது. இந்தக் கட்டத்தில், கிறிஸ்து பலவற்றை நிறைவேற்றினார், ஆனால் புதிய உடன்படிக்கையின் எதிர்பார்ப்புகள் அனைத்தையும் நிறைவேற்றவில்லை. பின்னர், தொடர்ச்சியில், புது உடன்படிக்கை யுகம் சபையின் வரலாறு மூலம் காலவரையின்றி தொடரும். இந்தக் கட்டத்தில், கிறிஸ்து பலவற்றை நிறைவேற்றுகிறார். ஆனால் புதிய உடன்படிக்கையின் எதிர்பார்ப்புகள் அனைத்தையும் இன்னும் நிறைவேற்றவில்லை. இறுதியில் புது உடன்படிக்கை யுகம் கிறிஸ்துவின் இரண்டாவது வருகையில் நிறைவடையும். அப்போது எல்லா எதிர்பார்ப்புகளும் முழுமையாக நிறைவேறும்.

புது உடன்படிக்கையின் இந்த மும்மடங்கு நிறைவேறுதல் புதிய ஏற்பாட்டு இறையியலின் இரண்டாவது அடிப்படைப் பண்பை புரிந்துகொள்ள உதவுகிறது. இது கிறிஸ்துவை மையப்படுத்தியது மட்டுமல்ல; புதிய ஏற்பாட்டு இறையியல் இந்த மூன்று நிலைகளில் புது உடன்படிக்கையின் கொள்கைகளை விளக்குவதற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாக, புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் புது உடன்படிக்கையில் வாழ்க்கைக்கான எதிர்பார்ப்புகளை சரிசெய்ய நேரத்தை செலவிட வேண்டியிருந்தது. எடுத்துக்காட்டாக, எரேமியா 31 உருவாக்கிய எதிர்பார்ப்புகளைப் போலல்லாமல், மத்தேயு 6:12 மற்றும் 1 யோவான் 1:9 போன்ற வேத பகுதிகள் கிறிஸ்துவின் சீஷர்கள் இன்னும் தேவனுடைய பிரமாணத்தை மீறுவதால் மன்னிப்பு கேட்க வேண்டும் என்பதை விளக்குகின்றன. புது உடன்படிக்கை சபையில் உண்மையான விசுவாசிகளின் மத்தியில் போலி விசுவாசிகள் இருப்பதை 2 கொரிந்தியர் 11:13 மற்றும் கலாத்தியர் 2:4 போன்ற பகுதிகளில் நாம் காண்கிறோம். புது உடன்படிக்கைக் கொள்கைகள் வெளிவருவதை இவை மற்றும் பிற காரணிகள் எவ்வாறு பாதித்தன? ஏதோ ஒரு வகையில், புதிய ஏற்பாட்டு இறையியலின் ஒவ்வொரு பரிமாணமும் இந்த கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் அர்ப்பணிக்கப்பட்டது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உடன்படிக்கை பிரதிநிதிகள் மற்றும் வரலாற்று ரீதியாக பொருத்தமான கொள்கைகள் மூலம் தேவன் தனது ராஜ்யத்தை எவ்வாறு நிர்வகித்தார் என்பதை இப்போது நாம் பார்த்தோம், வேதாகம உடன்படிக்கைகளில் கொள்கைகளின் இயற்கையான வளர்ச்சியை நாம் இப்போது ஆராய வேண்டும்.

## இயற்கையான வளர்ச்சி

உடன்படிக்கைக் கொள்கைகள் இயற்க்கையாக வளர்வதைப் பற்றி நாம் பேசும்போது, ஒரு மரத்தின் வளர்ச்சி போன்ற ஒன்றை நம் மனதில் வைத்திருக்கிறோம். ஒரு மரம் விதையிலிருந்து முழு முதிர்ச்சிக்கு வளரும்போது மாறுகிறது, ஆனால் அது இன்னும் அதே உயிரினமாகவே உள்ளது. பழைய ஏற்பாட்டு உடன்படிக்கைகளை நாம் அதே வழியில் பார்க்க முடியும். ஒவ்வொரு பழைய ஏற்பாட்டு உடன்படிக்கையிலும் வெவ்வேறு உடன்படிக்கை பிரதிநிதிகள் இருந்தனர் மற்றும் வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பொருத்தமான கொள்கைகளில் கவனம் செலுத்தின. ஆனால், இந்த மாற்றங்களின் மத்தியிலும் ஒரு மரத்தைப் போல அதற்கு இயற்கை ஒற்றுமை இருந்தது.

முதலில் பழைய ஏற்பாட்டில், தேவனுடைய உடன்படிக்கைகளின் இயற்கையான வளர்ச்சியை நாம் பார்ப்போம். முதலில் பழைய ஏற்பாட்டில் என்னவென்று கற்றுக்கொள்வோம். பழைய ஏற்பாட்டிலிருந்து புது உடன்படிக்கை வரையிலான இயற்கையான வளர்ச்சியைப் பற்றிப் பார்ப்போம். பழைய ஏற்பாட்டு உடன்படிக்கைகளிலிருந்து தொடங்கலாம்.

### பழைய ஏற்பாடு

பழைய ஏற்பாட்டு வரலாற்றில் உடன்படிக்கைகளின் கொள்கைகள் எவ்வாறு நடைமுறையில் இருந்தன என்பதை நாம் மனதில் வைத்துக் கொள்ளும்போது பழைய ஏற்பாட்டு உடன்படிக்கைகளின் இயற்கையான வளர்ச்சியைக் காணலாம். எடுத்துக்காட்டாக, ஆதாமின் காலத்திலிருந்தே, மனித இனத்தை, அவருடைய சாயலாக, அவருடைய ராஜ்யத்தை பூமியெங்கும் பரப்புவதற்காக தேவன் நிறுவினார். இந்தக் கொள்கை காலப்போக்கில் உருவாக்கப்பட்டது, ஆனால் அது ஒருபோதும் முற்றிலுமாக நிராகரிக்கப்படவில்லை.

நோவாவின் காலத்திலிருந்தே, தேவன் தனது ராஜ்ய நோக்கங்களுக்காக தேவனுடைய வீழ்ந்த சாயல்களுக்கு பாதுகாப்பான இடமாக இயற்கையின் ஸ்திரத்தன்மையை நிறுவினார். இந்த நிர்வாகக் கொள்கை பிற்கால உடன்படிக்கைகளுடன் இணைந்து பல்வேறு வழிகளில் மாறியது, ஆனால் தேவன் அதை ஒருபோதும் ஒதுக்கி வைக்கவில்லை.

ஆபிரகாமின் காலத்திலிருந்தே, தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனங்களாக இஸ்ரவேலுக்கு விசேஷித்த சலுகைகளும் பொறுப்புகளும் வழங்கப்பட்டன. வரலாற்றில் இந்த விசேஷித்த பங்கில் மேலும் பல உடன்படிக்கைகள் சேர்க்கப்பட்டு மேம்படுத்தப்பட்டது, ஆனால் அது தேவனின் ராஜ்ய நிர்வாகத்திலிருந்து ஒருபோதும் மறைந்துவிடவில்லை.

மோசேயின் காலத்திலிருந்தே, நியாயப்பிரமாணம் இஸ்ரவேலுக்கு வழிகாட்டியாக செயல்பட்டது. மற்ற உடன்படிக்கைகள் சேர்க்கப்பட்டதால் இந்த நியாயப்பிரமாணம் வித்தியாசமாக பயன்படுத்தப்பட வேண்டியிருந்தது, ஆனால் அது ஒருபோதும் ரத்து செய்யப்படவில்லை.

தாவீதின் காலத்திலிருந்தே, தாவீதின் அரச வம்சம் தேவனுடைய ஜனங்களை தங்கள் ராஜ்ய சேவையில் வழிநடத்தியது. புது உடன்படிக்கை மற்றும் இயேசுவின் ராஜ்யத்தில் இந்த தலைமை மாறினாலும், அது ஒதுக்கி வைக்கப்படவில்லை.

பழைய ஏற்பாட்டில் நாம் காணும் இயற்கையான வளர்ச்சியின் முறை கிறிஸ்துவில் புது உடன்படிக்கையுடன் தொடர்ந்தது. இது முந்தைய உடன்படிக்கைகளிலிருந்து இயற்கையாகவே வளர்ந்தது.

## புது உடன்படிக்கை

எரேமியா 31:31 இல் தேவன் சொன்னதை மீண்டும் பார்ப்போம்:

> இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன் (எரேமியா 31:31).

பெரும்பாலும், கிறிஸ்தவர்கள் "புது உடன்படிக்கை" என்ற சொல் பயன்பாட்டிற்கு *முற்றிலும்* புதியது என்கிற அர்த்தத்தைக் கொடுக்கின்றனர். அதுமட்டுமல்ல, வேதாகமத்தின் முந்தைய உடன்படிக்கைகளிலிருந்து துண்டிக்கப்பட்டது என்றும் சொல்கின்றனர். எப்படியிருந்தாலும், "புதியது" என்ற சொல் *சடாஷ்* என்ற எபிரெய வார்த்தையிலிருந்து வருகிறது என்பதை அறிவது முக்கியம். ஏசாயா 61:4, எசேக்கியேல் 36:26 மற்றும் யோபு 29:20 போன்ற வேத பகுதிகள் இந்த வார்த்தையும் அதனுடன் தொடர்புடைய வாய்மொழி வடிவங்களும் "முற்றிலும் புதியவை" என்கிற அர்த்தத்தை தரவில்லை என்பதை தெளிவுபடுத்துகின்றன. மாறாக, இந்த சொற்களின் குடும்பம் "புதுப்பிக்கப்பட்டது," "புதிதாக்கப்பட்டது," "மீண்டும் கட்டப்பட்டது" அல்லது "புத்துணர்வூட்டப்பட்டது" ஆகிய அர்த்தங்களை கொடுக்கின்றன.

புது உடன்படிக்கை "இஸ்ரவேல் ஜனங்களுடனும் யூதா ஜனங்களுடனும்" செய்யப்படும் என்று தேவன் சொன்னதன் மூலம் இந்த பார்வை ஆதரிக்கப்படுகிறது. வேறு வார்த்தைகளில் சொன்னால், புது உடன்படிக்கை என்பது இஸ்ரவேலின் சிறையிருப்பு முடிந்தபின் ஆபிரகாமின் சந்ததியினரோடும், அவருடைய குடும்பத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

புறஜாதியினரோடும் ஏற்படுத்தப்பட்ட ஒரு புதுப்பிக்கப்பட்ட தேசிய உடன்படிக்கையாகும்.

அதற்கு முந்தைய ஒவ்வொரு பழைய ஏற்பாட்டு உடன்படிக்கையையும் போலவே புது உடன்படிக்கையும் நிச்சயமாக வரலாற்றில் அதன் இடத்திற்கு பொருத்தமான கொள்கைகளை நிறுவியது. இந்த புதிய கொள்கைகள் கிறிஸ்துவின் மூலமாகவும் அவருடைய அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் மூலமாகவும் வெளிப்படுத்தப்பட்டன. ஆனால் ஒவ்வொரு பழைய ஏற்பாட்டு உடன்படிக்கையையும் போலவே, புது உடன்படிக்கை முந்தைய உடன்படிக்கை நிர்வாகங்களில் தேவன் வகுத்த கொள்கைகளை புதுப்பித்து, மீண்டும் கட்டியெழுப்பி, புதிதாக்கி, புத்துணர்வூட்டியது.

> வேதவாக்கியம் மற்றும் இரட்சிப்பின் வரலாறு முழுவதும் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி நாம் நினைக்கும் போது, வேதாகம உடன்படிக்கைகளைப் பற்றியும் அவைகள் கிறிஸ்துவில் நிறைவேறுதலை எட்டும்போது அதன் நிர்வாகத்தில் மாற்றங்கள் ஏற்படுவதையும் நீங்கள் காணலாம். ஆகையால் குறிப்பாக பழைய ஏற்பாட்டில், இஸ்ரவேல் தேசத்தின் மூலம் தேவன் தனது இரட்சிப்பின் திட்டத்தை பழைய உடன்படிக்கைக்குள் கொண்டு வருகிறார், அவர் முதன்மையாக ஒரு தேசத்துடன் இணைந்து பணியாற்றி வருகிறார், அவர் முதன்மையாக அந்த தேசத்தின் அடிப்படையில் காணக்கூடிய பிரதிநிதித்துவமாகிய தேவராஜ்யத்தின் அடிப்படையில் செயல்படுகிறார், அங்கே அவர்கள் மூலம் அவர்கள் மேசியாவும் கர்த்தருமாகிய இயேசுவின் வருகையை கொண்டு வருவார்கள். அந்த ராஜ்யத்தின் நிர்வாகமானது ஒரு குறிப்பிட்ட இடம், இருப்பிடம், நிலம், குறிப்பிட்ட ஆட்சி மற்றும் அரசாங்கத்தின் கீழ் அவர்களுடன் பிணைக்கப்பட்டுள்ளதை நீங்கள் காண்கிறீர்கள். கிறிஸ்துவில் அது நிறைவேறுவதைப் பற்றி நீங்கள் நினைக்கும் போது, புது உடன்படிக்கைக்குள்ளாக ராஜ்யத்தைக் கொண்டுவரும்போது, சில மாற்றங்கள் காணப்படும். கிறிஸ்து தான் ராஜாவாக இருப்பார். பழைய ஏற்பாட்டின் மாதிரி மற்றும் நிழல்களை நிறைவேற்றுபவர் அவர்தான். அவர் தாவீது மற்றும் மோசேயின் பங்கை நிறைவேற்றுகிறார். அவர்தான் தனது வாழ்க்கையிலும் மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் ராஜ்யத்தைத் துவக்கி, தேவனுடைய இரட்சிப்பின் ஆட்சியை இந்த உலகத்திற்குக் கொண்டுவருகிறார். பின்னர் ஒரு சர்வதேச சமூகத்தைக் கொண்டுவருகிறார் – நாம் அதை சபை என்று



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அழைக்கிறோம், அது ஒரு புதிய மனிதனாகவும், யூதரும் புறஜாதியாரும் ஒன்றாக இருக்கும் இடமாகவும் இருக்கும் – அதனால் அவர் இப்போது சபை முழுவதும் ஆட்சி செய்கிறார் … ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் சிறுமிகளும் விசுவாசத்திற்கும் மனந்திரும்புதலுக்கும் வருவதால் அவருடைய மக்கள் மூலமாக கிறிஸ்துவின் ஆவிக்குரிய ஆட்சி நடக்கிறது. அவர்கள் விசுவாசிக்கிற படியால் அந்த ராஜ்யத்தில் நுழைகிறார்கள். தேவனுடைய இரட்சிக்கும் ஆட்சி அவர்களிடம் வருகிறது. அந்த ராஜ்யம் இப்போது உலகெங்குமிருக்கிறது, அங்கு தேவனுடைய ஆட்சியில் ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும், தேசத்திலிருந்தும், மக்களிலிருந்தும், மொழியிலிருந்தும் வரும் மக்கள் காணப்படுவார்கள். கிறிஸ்து தனது ஜனங்களை ஆளுகின்ற ஒரு வகையான தேவராஜ்யம் இருக்கும் உள்ளூர் சபையில் அது தன்னைக் காட்டுகிறது, ஆனால் அது பழைய இஸ்ரவேல் தேசத்தின் கீழ் இருந்ததைப் போல இல்லை.

– Dr. ஸ்டிபன் ஜே. வெல்லும்

தேவனுடைய ராஜ்யத்தின் நிர்வாகத்தைப் பற்றியும் அது எவ்வாறு மாறக்கூடும் என்பதையும் நாம் சிந்திக்கும்போது, ஒரு பண்டைய அதிகாரத்துவவாதி தனது முதல் திட்டம் தோல்வியடைந்ததால் இரண்டாம் திட்டத்தை செயல்படுத்த ஒரு புதிய நிறுவன விளக்கப்படத்தைப் பற்றி சிந்திக்க முயற்சிப்பதை போல நாம் தேவனைப் பற்றி நிச்சயமாக நினைக்க விரும்பவில்லை. அது அப்படி இருக்க முடியாது. அவருடைய நோக்கங்கள் மாறாமல் இருக்க வேண்டும். ஆகையால் அவரது இயக்கக் கொள்கைகள் ஒப்பீட்டளவில் ஒருமித்ததாக இருக்கும் என்று கருதி, பின்னர் என்ன மாற்றங்கள் நிறுவப்பட்டிருக்கலாம் என்பதைக் கண்டறிவது சிறந்தது. இந்த விஷயத்தில், இயேசு இனி அங்கு இல்லை என்பது முக்கியம் என்று நான் நினைக்கிறேன், ஏனென்றால் அப்பொழுது ஆவியானவர் வருவார். அதனால் சபை வல்லமை பெற்று இயேசுவில் மட்டும் மையம் கொண்டு ஒரே இடத்தில் இருக்காமல் இயேசுவின் ஆவியால் பல இடங்களுக்கு அவரின் செய்தியை கொண்டு சென்று அவருடைய ஊழியத்தை உலகம் முழுவதும் கொண்டு சென்றது. இப்போது உடன்படிக்கைகளில் மாற்றம் நிகழ்ந்தது. அதனால் மாம்சத்தில் எதெல்லாம் செயல்பட்டதோ

> இப்போது ஆவியால் வல்லமை பெறும். ஆகையால் பழைய உடன்படிக்கையின் குறிக்கோளான – தேவனை உங்கள் முழு இருதயம், மனம், ஆத்துமா மற்றும் பலத்துடன் நேசித்தல், உங்களைப் போலவே உங்கள் அயலாரையும் நேசித்தல் – ஆகியவற்றை விசுவாசிகள் இப்போது செய்ய பலம் பெற்றிருக்கிறார்கள்.
>
> – Dr. சீன் மாக்டோனப்

பழைய ஏற்பாட்டு உடன்படிக்கைகளுக்கும் புது உடன்படிக்கைக்கும் இடையிலான இந்த இயற்கையான வளர்ச்சிகள் புதிய ஏற்பாட்டு இறையியல் குறித்த மூன்றாவது முக்கியமான முன்னோக்கை நமக்கு வழங்குகின்றன. கிறிஸ்துவை மையமாகக் கொண்டு இருப்பதோடு, கிறிஸ்துவின் ராஜ்யத்தின் மும்மடங்கு விரிவாக்கத்திற்கு பொருத்தமான கொள்கைகளில் கவனம் செலுத்தியது மேலும் புதிய ஏற்பாட்டு இறையியல் பழைய ஏற்பாட்டு இறையியலை அடிப்படையாகக் கொண்டதாய் இருக்கிறது.

அதன் சாரத்தைப் பார்க்கும்போது, புதிய ஏற்பாட்டு இறையியலானது ஒரு புதிய விசுவாசம் அல்ல. அதற்கு பதிலாக, புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் பழைய ஏற்பாட்டின் போதனைகளை கிறிஸ்துவில் தேவனுடைய வெளிப்பாட்டின் வெளிச்சத்தில் பயன்படுத்தினர். இதனால்தான் புதிய ஏற்பாடு சிறியதாய் இருக்கிறது. இது பழைய ஏற்பாட்டின் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்தியது. புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் தங்கள் இறையியல் கண்ணோட்டங்களை ஆதரிக்க பழைய ஏற்பாட்டு பகுதிகளை நூற்றுக்கணக்கான முறை பயன்படுத்தினர். ஆகவே புதிய ஏற்பாட்டு இறையியலை புதிய உடன்படிக்கை இறையியல் என்று நாம் கூறும்போது, அது பழைய ஏற்பாட்டிலிருந்து எப்படியாவது பிரிந்து விட்டது என்று அர்த்தமல்ல. மாறாக, புதிய ஏற்பாட்டு இறையியலின் ஒவ்வொரு பரிமாணமும் பழைய ஏற்பாட்டு இறையியலை இணைக்கிறது மற்றும் புதிய ஏற்பாட்டு இறையியலில் கட்டமைக்கப்படுகிறது.

புது உடன்படிக்கை குறித்த நம் பாடத்தில் இதுவரை தேவனுடைய ராஜ்ய நிர்வாகத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்தோம். இப்போது இந்த பாடத்தில் நம்முடைய இரண்டாவது முக்கிய தலைப்பான 'புது உடன்படிக்கையில் தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்கும் இடையிலான தொடர்புகளின் இயக்கவியலுக்கு' நாம் திரும்ப வேண்டும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## தொடர்புகளின் இயக்கவியல்

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் தேவனுக்கும் அவருடைய உடன்படிக்கை ஜனங்களுக்கும் இடையிலான தொடர்புகளை எண்ணற்ற வழிகளில் விவரித்தனர். அவர்கள் தேவனுடைய கிருபையையும் அவருடைய கோபத்தையும் குறிப்பிட்டனர். அவர்கள் கீழ்ப்படிதலை வலியுறுத்தினர், கீழ்ப்படியாமைக்கு எதிராக எச்சரித்தனர். தேவன் சிலரை எவ்வாறு தீங்கிலிருந்து பாதுகாக்கிறார், மற்றவர்களை எவ்வாறு துன்பப்படும்படி அழைக்கிறார் என்பதை அவர்கள் விவரித்தனர். தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்த நேரடி மற்றும் மறைமுக குறிப்புகள் சில முக்கியமான கேள்விகளை எழுப்புகின்றன. இந்த வகைக்கு எந்த இறையியல் கண்ணோட்டங்கள் ஆதரவு தெரிவித்தன? புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் இதை எப்படி உணர்ந்தார்கள்? தெய்வீக மற்றும் மனித தொடர்புகளின் இயக்கவியலை அவர்கள் எவ்வாறு அணுகினர்?

மீண்டும், பண்டைய கிழக்கத்திய சர்வாதிகார ராஜா-சேவிக்கிற ராஜா ஒப்பந்தங்களின் பின்னணியில் தொடங்குவோம். இந்த ஒப்பந்தங்கள் பொதுவாக பெரிய மற்றும் சிறிய ராஜாக்களுக்கிடையேயான தொடர்புகளின் மூன்று அம்சங்களை மையமாகக் கொண்டிருந்தன. முதலாவது, பெரிய ராஜாக்கள் எப்போதுமே தங்களை சேவிக்கிற ராஜாக்களிடம் கருணை காட்டியதாகக் கூறினர். இரண்டாவது, சேவிக்கிற ராஜாக்கள் தங்கள் விசுவாசத்தை பெரிய ராஜாக்களிடம் நிரூபிக்க சில வழிகளைக் கூறினர். மூன்றாவதாக, கீழ்ப்படிதலுக்கு ஆசீர்வாதமும் கீழ்ப்படியாமைக்கு சாபமும் வழங்கப்படும் என்று பெரிய ராஜாக்கள் சொன்னார்கள் . பெரிய ராஜாக்கள் தங்கள் உடன்படிக்கைகளின் விதிமுறைகளை அவர்களுக்குப் பொருத்தமானபடி மாற்றுவதற்கான உரிமையை வைத்திருந்தார்கள் என்று நாம் சொல்ல வேண்டும். ஆனால் பொதுவாக, நன்மை, விசுவாசம் மற்றும் விளைவுகள் இந்த ஒப்பந்த உறவுகள் நிர்வகிக்கப்படும் அடிப்படைக் கொள்கைகளை உருவாக்கின.

அதே கூறுகள் வேதாகம உடன்படிக்கைகளில் தேவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான தொடர்புகளின் இயக்கவியலில் காணப்படும் என்பதை நாம் பார்க்கப்போகிறோம். உயர்ந்த ராஜாவாக, அவருடைய உடன்படிக்கைகளின் இயக்கவியல் எவ்வாறு பலனளிக்கும் என்பதை தீர்மானித்தவர் தேவன் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அவர் இதை மனித எதிர்பார்ப்புகளின் தரத்தின்படி இல்லாமல் தனது சொந்த ஒப்பிடமுடியாத ஞானத்தின் படி செய்தார். இதனால்தான், தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்குமிடையிலான தொடர்புகள் பெரும்பாலும் மனிதனுடைய புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற்பட்டவை என்று வேதம் விளக்குகிறது. உபாகமம் 29:29, ஏசாயா 55:8,9 போன்ற வேத பகுதிகளும், ஏராளமான சங்கீதங்களும், யோபு, பிரசங்கி போன்ற முழு புத்தகங்களும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நமக்கு நினைவூட்டுவது என்னவென்றால், இந்த உடன்படிக்கை இயக்கவியலை தேவன் செயல்படுத்திய வழிகள் எப்போதும் நல்லதாகவும், ஞானமாகவும் இருந்தன.

அவருடைய ஜனங்களுக்கு தேவன் பாராட்டின தெய்வீக தயவை முதலில் குறிப்பிடுவதன் மூலம் தேவனுக்கும் ஜனங்களுக்கும் இடையிலான தொடர்புகளின் இயக்கவியலை முதலில் ஆராய்வோம். இரண்டாவதாக, தேவனுடைய உடன்படிக்கை மக்களுக்கான விசுவாச சோதனைகள் எவ்வாறு வேதாகம உடன்படிக்கைகளில் உள்ளடங்கியிருந்தன என்பதைப் பார்ப்போம். மூன்றாவது, கீழ்ப்படிதலுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்கள் மற்றும் கீழ்ப்படியாமைக்கு கிடைக்கும் சாபங்கள் பற்றி உரையாற்றுவோம். முதலில் தெய்வீக தயவு பற்றி பார்ப்போம்.

## தெய்வீக தயவு

பழைய ஏற்பாட்டு உடன்படிக்கைகளிலும் புது உடன்படிக்கையிலும் தெய்வீக தயவின் கூறுகளைப் பார்ப்போம். முதலில் பழைய ஏற்பாட்டு உடன்படிக்கைகளில் தெய்வீக தயவைப் பற்றி பார்ப்போம்.

### பழைய ஏற்பாடு

தேவனுடைய தயவு, அல்லது இரக்கம், அவருடைய உடன்படிக்கைகளால் நிறுவப்பட்ட உறவுகளைத் துவக்கி, நிலைநிறுத்தியது என்பதை பழைய ஏற்பாடு தெளிவுபடுத்துகிறது. தொடக்கத்தில், அஸ்திபார உடன்படிக்கையில் தேவன் தனது உடன்படிக்கை பிரதிநிதியான ஆதாமுக்கு தெய்வீக தயவைக் காட்டினார். ஆதாம் பாவத்தில் விழுவதற்கு முன்பு, ஏதேன் தோட்டத்தை உருவாக்கி, தேவனின் சாயலாக அங்கே வைப்பதன் மூலம் தேவன் ஆதாமுக்கு தயவு பாராட்டினார். நம்முடைய முதல் பெற்றோர்களான ஆதாம் மற்றும் ஏவாள் பாவத்தில் விழுந்தபின் அவர்களுக்கு இரட்சிப்பின் கிருபையை அளித்தார். கூடுதலாக, ஆதாம் தேவனுடைய மன்றத்தில் மனிதகுலத்தை பிரதிநிதித்துவப்படுத்தினார். ஆகவே, ஆதாமிடம் தேவன் காட்டிய தயவுகள் அவர் பிரதிநிதித்துவப்படுத்திய உடன்படிக்கையின் ஜனங்களுக்கு வழங்கப்பட்டன. ஏதோ ஒரு விதத்தில் தேவன் அவிசுவாசிகள் உட்பட எல்லா மக்களுக்கும் பொதுவான கிருபையைக் காட்டினார். ஆபேல், சேத் மற்றும் வேறு பலரைப் போன்ற உண்மையான விசுவாசிகளுக்கு தேவன் இரட்சிக்கும் கிருபையையும் காட்டினார்.

ஸ்திரத்தன்மையின் உடன்படிக்கையில் தேவனுடைய உடன்படிக்கை பிரதிநிதியான நோவா தனது வாழ்நாள் முழுவதும், தெய்வீக தயவைப் பெற்றார் – அதாவது பொதுவான கிருபை மற்றும் இரட்சிக்கும் கிருபையைப் பெற்றார். மேலும், ஆதாமின் உடன்படிக்கையைப் போலவே, நோவாவுக்கு கிடைத்த தயவுகளும் நோவா பிரதிநிதித்துவப்படுத்திய உடன்படிக்கை மக்களான எல்லா மனிதகுலத்துக்கும் வழங்கப்பட்டன. பல்வேறு வழிகளில்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தேவன் எல்லா மக்களுக்கும் தனது பொதுவான கிருபையைக் காட்டினார். உண்மையான விசுவாசிகளுக்கு, குறிப்பாக சேமின் பரம்பரையில், தேவன் இரட்சிக்கிற கிருபையைக் காட்டினார்.

இஸ்ரவேலுடைய தெரிந்தெடுத்தலின் உடன்படிக்கையில் தேவனின் உடன்படிக்கை பிரதிநிதியாக பொதுவான மற்றும் இரட்சிக்கிற கிருபையின் தெய்வீக தயவை ஆபிரகாம் அனுபவித்தார். ஆபிரகாமிடம் தேவன் காட்டிய தயவுகள் அவர் பிரதிநிதித்துவப்படுத்திய உடன்படிக்கையின் ஜனங்களான இஸ்ரவேலரும் இஸ்ரவேலுக்குள் ஏற்றுக்கொள்ளப்படும் புறஜாதிகளுக்கும் வழங்கப்பட்டன. அவர் பொருத்தமாகக் கண்டபோது, ஏசாவைப் போன்ற அவிசுவாசிகள் உட்பட இந்த உடன்படிக்கையின் மக்களுக்கு தேவன் பொதுவான கிருபையைக் காட்டினார். ஆனால், யாக்கோபு, யோசேப்பு போன்ற பல உண்மையுள்ள நபர்களிடமும் தேவன் தம்முடைய இரட்சிப்பின் கிருபையை ஊற்றினார்.

மோசேயினுடைய வாழ்க்கையின் கதைகள் நமக்குச் சொல்வது போல், நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கை பிரதிநிதியான மோசேக்கு தனித்துவமான வழிகளில் பொதுவான மற்றும் இரட்சிக்கும் கிருபையின் தெய்வீக தயவை தேவன் காட்டினார். தேவன் மோசேக்குக் காட்டிய தயவுகள் அவர் பிரதிநிதித்துவப்படுத்திய இஸ்ரவேல் தேசமும் இஸ்ரவேலில் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களுக்கும் வழங்கப்பட்டன. எல்லா இஸ்ரவேலர்களும் தேவனுடைய பொதுவான கிருபையிலிருந்து பயனடைந்தனர், இரட்சிக்கிற விசுவாசம் இல்லாதவர்கள் கூட பயனடைந்தனர். இஸ்ரவேலில் இருந்த இஸ்ரவேலர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு பலருக்கும் தேவன் தம்முடைய இரட்சிப்பின் கிருபையைக் காட்டினார்.

எல்லாவற்றிற்கும் மேலாக, அரசாட்சியின் உடன்படிக்கையில் தேவனுடைய தெரிந்தெடுக்கப்பட்ட உடன்படிக்கை பிரதிநிதியான தாவீது விசேஷித்த வழிகளில் பொதுவான மற்றும் இரட்சிக்கும் கிருபையின் தெய்வீக தயவைப் பெற்றார். தேவன் தாவீதுக்குக் காட்டிய தயவுகள் அவர் பிரதிநிதித்துவப்படுத்திய உடன்படிக்கை மக்களான அவருடைய அரச குமாரர்கள், இஸ்ரவேல் தேசம் மற்றும் இஸ்ரவேலர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து புறஜாதிகளுக்கும் வழங்கப்பட்டன. தேவனுடைய விவரிக்க முடியாத ஞானத்தின்படி, அவிசுவாசிகள் உட்பட அவர்கள் அனைவரும் இஸ்ரவேலில் பொதுவான கிருபையை அனுபவித்தார்கள். ஆனால் இஸ்ரவேலில் உண்மையான விசுவாசிகள் தேவனுடைய இரட்சிப்பின் கிருபையைப் பெற்றனர்.

பழைய ஏற்பாட்டு உடன்படிக்கைகளில் தேவனுடைய தெய்வீக தயவு புது உடன்படிக்கையின் இயக்கவியலையும் பாதித்தது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## புது உடன்படிக்கை

முதலில், புதிய ஏற்பாடு புது உடன்படிக்கை பிரதிநிதியான கிறிஸ்துவை நோக்கி தேவனுடைய தயவு குறித்த கவனத்தை ஈர்க்கிறது. ஆதாமைப் போலவே பாவத்தில் விழுவதற்கு முன்பு, இயேசுவுக்கு ஒருபோதும் இரக்கமோ, மன்னிப்போ அல்லது தேவனிடமிருந்து இரட்சிக்கிற கிருபையோ தேவையாக இருக்கவில்லை என்பதை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். அப்படியிருந்தும், மத்தேயு 3:16,17; மத்தேயு 12:18; லூக்கா 3:22 போன்ற வேத பகுதிகள் தனது ராஜ்யத்தின் துவக்கத்தின் போது இயேசுவின் ஊழிய வல்லமைக்காக பிதா தனது ஆவியால் அவரை அபிஷேகம் செய்தார் என்று கூறுகின்றன. உண்மையில், ரோமர் 8:11 இன் படி, பரிசுத்த ஆவியின் வல்லமையால் பிதா இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினார். மேலும், சங்கீதம் 2:4-6; மத்தேயு 28:18; அப்போஸ்தலர் 2:31-33 போன்ற வசனங்களின் படி, இயேசுவிடம் பிதா காட்டிய தயவு, அவருடைய ராஜ்யத்தின் தொடர்ச்சியின் போது அவருடைய தற்போதைய அதிகாரம் மற்றும் அதிகார நிலைக்கு அவரை உயர்த்தியது. இந்த தயவு கிறிஸ்துவின் ராஜ்யத்தின் முடிவில் கிடைக்கும் சலுகைகளுக்கும் மகிமைக்கும் வழிவகுக்கும்.

இரண்டாவது இடத்தில், புதிய ஏற்பாடு கிறிஸ்தவ இறையியலாளர்கள் பெரும்பாலும் அழைக்கும் ”கிறிஸ்துவோடு ஐக்கியம்” என்கிற காரியத்தோடு கவனம் செலுத்துகிறது. இந்த போதனை கிறிஸ்துவுக்கு தேவன் அளித்த தயவு, அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் உடன்படிக்கை மக்கள் மீதும் சபையின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை தெளிவுபடுத்துகிறது.

கிறிஸ்துவுடனான விசுவாசிகளின் ஐக்கியமானது இரு வகைப்படும். ஒருபுறம், நாம் “கிறிஸ்துவில்” இருக்கிறோம். இதன் அர்த்தம் என்னவென்றால், கிறிஸ்து நம்முடைய உடன்படிக்கை பிரதிநிதி என்பதால், புது உடன்படிக்கையின் மக்கள் தேவனுடன் பரலோக மன்றத்தில் கிறிஸ்துவுடன் அடையாளம் காணப்படுகிறார்கள். ஆகவே, பல வழிகளில், கிறிஸ்துவைக் குறித்து எது உண்மையாக இருக்கிறதோ அது அவர் தேவனுடைய பிராகாரத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைவருக்கும் உண்மையாக இருக்கும். எபேசியர் 1:13 இல் இதை மனதில் வைத்துத்தான் பவுல் சொல்லி இருந்தார்:

> நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளானீர்கள் (எபேசியர் 1:13).

ஆனால் மற்றொரு பக்கம், புதிய ஏற்பாடானது விசுவாசிகள் ”கிறிஸ்துவுக்குள்” இருப்பதைப் பற்றி மட்டும் பேசவில்லை. “கிறிஸ்து நமக்குள் இருக்கிறார்” என்பதையும் பேசுகிறது. அதாவது, கிறிஸ்து இருப்பவராகவும் மற்றும் இந்த உலகத்தில் நமது அனுதின அனுபவங்களில் பரிசுத்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆவியானவர் மூலமாக விசுவசிகளுக்குள்ளாக இருந்து கிரியை செய்பவராகவும் காணப்படுகிறார். ரோமர் 8:10-11 யை கவனிக்கவும்:

> மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும். அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான … உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார் (ரோமர் 8:10-11).

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் சபையானது பரலோகத்தில் கிறிஸ்துவுடன் அடையாளம் காணப்பட்டதை ஒப்புக்கொண்ட போதிலும், புது உடன்படிக்கையின் காலமானது அதன் எல்லாவற்றிற்குமான முடிவை இன்னும் எட்டவில்லை என்பதையும் அவர்கள் அறிந்திருந்தனர் என்பதை இந்த பகுதி குறிப்பிடுகிறது. அதன் முடிவாக, புதிய உடன்படிக்கையின் இந்த வாழ்வானது கிறிஸ்து மறுபடியும் வரும்போது இருக்கப்போவதைவிட வித்தியாசமானது. உதாரணமாக, தேவனுடைய புதிய உடன்படிக்கையின் மக்கள் இப்பொழுதும் பாவம் செய்வதைத் தொடர்கிறார்கள். மேலும், கள்ள விசுவாசிகள் – இரட்சிப்பின் விசுவாசம் இல்லாதவர்களாகிய அவர்கள் – இந்த உலகத்தில் இருக்கிற சபைகளில் உண்மையான விசுவாசிகளுடன் காணப்படுகிறார்கள். எல்லாவற்றிற்குமான முடிவின் போது மட்டுமே நமக்குள்ளான கிறிஸ்துவின் கிரியை நிறைவுபெறும்.

இதன் காரணமாகவே, கிறிஸ்துவின் வருகைக்கு முன்பதாக, தேவன் பொதுவான கிருபையை கள்ள விசுவாசிகளையும் சேர்த்து, சபையில் காணப்படுகிற எல்லா மக்களின் மீதும் காட்டுகிறார் என்பதை புதிய ஏற்பாடு கற்பிக்கிறது. உண்மையில், யோவான் 15:1-6 மற்றும் எபிரெயர் 6:4-6 பகுதிகள் ஒப்புமை காட்டி விளக்குவது போல அவிசுவாசிகள் தேவனிடமிருந்து தற்காலிகமான இரக்கத்தை அடிக்கடி சிறப்பாக அனுபவித்து வந்தாலும், அவர்கள் இரட்சிப்பின் கிருபையை பெற்றுக்கொள்வதில்லை. ஆனால் அதே வேளையில், உண்மையான விசுவாசிகளுக்கு தேவன் இரட்சிப்பின் கிருபையை இப்பொழுதும் கூட காண்பித்துக்கொண்டிருக்கிறார். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை, புதிய ஏற்பாட்டு இறையியலின் ஒவ்வொரு அம்சமும் தெய்வீக இரக்கத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

> பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டிலும் அவர் நல்லவர்களிடத்திலும் தீயவர்களிடத்திலும், நீதிசெய்கிறவர்களிடத்திலும் அநீதி செய்கிறவர்களிடத்திலும், அவருடைய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> பிள்ளைகளாகயிருப்பவர்களிடத்திலும் அவருடைய பிள்ளைகள் அல்லாதவரிடத்திலும், எல்லா மனிதர்களிடத்திலும் கனிவுள்ளவராக இருப்பதாக கர்த்தர் தெரிவிப்பதைக் காண முடிகிறது. பின்வரும் வழிகளில் கர்த்தர் கனிவுள்ளவராக இருக்கிறார்: முதலாவதாக, நாம் பாவிகளாயிருந்தும் அவர் நம்மை உடனடியாக அழித்துப்போடவில்லை. அவருடைய கிருபையினாலே வாழும்படியாக நம்மை அனுமதித்திருக்கிறார். இரண்டாவதாக, அவர் நீதியுள்ளவர்கள் மீதும், அநீதியுள்ளவர்கள் மீதும் மழை பெய்யப்பண்ணுகிறார். சூரியனானது பயிர்களை வளரச்செய்து நீதியுள்ளவர்கள் மற்றும் அநீதியுள்ளவர்களுக்கு வாழ்வளிப்பதாக நமக்கு சொல்லப்படுகிறது. இதன் அர்த்தம் என்னவென்றால், நல்லதோ, தீயதோ தேவன் எல்லா சிருஷ்டிப்புகளிடத்தும் கனிவுள்ளவராகக் காணப்படுகிறார். அதன் மூலமாக அவர் யார் என்பதை அறிந்துகொள்ளும்படியான வாய்ப்பை அவர் நம் அனைவருக்கும் தருகிறார். அவர் நமக்கு சொல்வது என்னவென்றால், அவரைப் பின்பற்றாதவர்க்கும் அவரை மறுதலிப்பவர்க்கும் கூட, அவரது செய்தியைக் கேட்பதற்கும், அவரது வார்த்தையைக் கற்றுக்கொள்வதற்கும், இரட்சிப்படைவதற்குமான வாய்ப்பை கர்த்தர் தருகிறார். எனவே கர்த்தர் அவரை மறுதலிப்பவர்கள் மீதும் கூட கனிவுள்ளவராக இருக்கிறார். அவரை உடையவர்களுக்கு, சதாகாலமும் அவர்களுடன் இருப்பதாகவும் என்றென்றும் அவர்களை ஆசீர்வதிப்பதாகவும் அவர் வாக்குத்தத்தம் செய்கிறார்.
>
> – Dr. ஆல்வின் படில்லா, மொழிப்பெயர்ப்பு

எபேசியர் 2:8 இல் பவுல் சொல்வது போல:

> கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு – இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு (எபேசியர் 2:8).

தேவனுக்கும் மனிதர்களுக்கும் இடையேயான ஆற்றல்மிக்க தொடர்பானது தெய்வீக இரக்கத்தின் வெளிப்பாட்டுடன் எவ்வாறு சம்மந்தப்படுகிறது என்பதை இப்பொழுது நாம் பார்த்தோம்; தேவனுடனான உடன்படிக்கையின் வாழ்க்கையை தேவபற்றின் பரீட்சைகளானது எவ்வாறு இன்றியமையாததாக்குகிறது என்பதையும் நாம் அறிந்துகொள்ள வேண்டும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கீழ்ப்படிதலின் இந்த தேவைகளானது தேவனுடனான உடன்படிக்கையில் இருப்பவர்களுடைய இருதயத்தின் நிலையினை வெளிப்படுத்துகிறது.

## தேவப்பற்றின் பரீட்சைகள்

இருபதாம் நூற்றாண்டைச் சார்ந்த பல மேதைகள் வேதாகம உடன்படிக்கையுடன் "ராஜரீக பரிசு" என்று அடிக்கடி அழைக்கப்பட்டு வந்த பழங்கால கிழக்கத்திய எழுத்துக்களையுடைய மற்றொரு பிரிவுடன் ஒப்பிட்டு வந்தனர் என்பதை இங்கே நாம் சொல்ல வேண்டும். இந்த பரிசுகள், சர்வாதிகார ராஜாவால் சேவிக்கிறவர்களுக்கு அல்லது குடிமக்களுக்கு வழங்கப்பட்ட நன்மையாகும். முற்கால ஆராய்ச்சியானது கடமைகளோ அல்லது தேவைகளோ, தேவப்பற்றின் பரீட்சைகளோ ராஜரீக பரிசை பெற்றுக்கொண்ட ஒருவருக்கு தேவை இல்லை என்ற முடிவுக்கு பலர் வருவதற்கு காரணமானது. மேலும், இதன் விளைவாக, பல வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் சில வேதாகம உடன்படிக்கைகளுக்கு தேவனுடைய மக்களிடமிருந்து விசுவாசம் தேவையில்லை என்று பரிந்துரைத்தனர். ஆனால் அதிகப்படியான சமீபத்திய ஆராய்ச்சிகள் இதற்கு எதிரான திசையை சுட்டிக்காட்டுகின்றன. ராஜரீக பரிசுகளுக்குக் கூட பற்று நிறைந்த சேவைகள் அதைப் பெற்றவர்களிடமிருந்து தேவைப்பட்டது என்பதை நாம் இப்பொழுது தெரிந்துகொண்டோம். தேவன் புதிய உடன்படிக்கை உள்பட *ஒவ்வொரு* வேதாகம உடன்படிக்கையில் அவருடைய ஜனங்களின் பற்றை பரீட்சித்தார் என்று வேதவார்த்தைகள் கூறும்போது நாம் ஆச்சரியப்படக்கூடாது.

புது உடன்படிக்கையின் வாழ்க்கையின் ஒரு அங்கமாக தேவன் நம்முடைய தேவப்பற்றை பரீட்சித்தார் என்று கூறும்போது, சில தீவிர தவறான புரிதல்களை நாம் தவிர்க்க வேண்டும். முதலாவதாக, வேதாகமத்தின் எந்தவொரு இடத்திலும், எந்தவொரு பாவியும் நற்கிரியைகள் மூலமாக இரட்சிப்பை சம்பாதிக்கவில்லை. நம்முடைய சுய முயற்சியின் மூலமாக தேவனுடைய நித்திய ஆசிர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான முழுநிறைவை நாம் ஒருபோதும் அடையமுடியாது. இரண்டாவதாக, நாம் செய்யும் ஒவ்வொரு நற்கிரியைகளும் நமக்குள் கிரியை செய்துகொண்டிருக்கிற தேவ கிருபையினாலே மாத்திரமே சாத்தியமாகிறது. தேவனுடைய தயவு மற்றும் அவருடைய ஆவியானவருடைய வல்லமைக்கு அப்பாற்பட்டு நம்மால் எந்த நற்கிரியைகளையும் நிறைவேற்ற முடியாது. மூன்றாவதாக, தேவன் அவருடைய உடன்படிக்கையின் ஜனங்களை கீழ்ப்படியும்படியாக எப்பொழுதும் அழைக்கிறார். பழைய மற்றும் புதிய ஏற்பாடு இரண்டிலும், தேவன் அவருடைய ஜனங்களின் இருதயத்தின் உண்மையான நிலையினை தேவனுடைய கட்டளைகளுக்கு அவர்கள் அளிக்கும் மறுமொழியினைக் கொண்டு அவர்களைப் பரீட்சித்தார் அல்லது நிரூபித்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> தேவனுடனான தனிப்பட்ட உறவானது, புதிய ஏற்பாட்டில் துவங்கவில்லை என்பதனை கிறிஸ்துவின் விசுவாசிகள் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். இது "நான் அவர்கள் தேவனாயிருப்பேன் அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள்" என்று வெகுகாலமாக சொல்லப்பட்டுவந்ததின் ஒரு நிறைவேறுதல் ஆகும். ஆதியிலிருந்து, ஏதேன் தோட்டத்திலிருந்து, ஆதியாகமம் 12 லிருந்து, உடன்படிக்கையின் ஜனங்களை ஏற்படுத்தியதிலிருந்து காணப்பட்டு வந்த ஒரு விதிமுறை ஆகும். அதனால், உள்ளான பக்தி என்பது கீழ்ப்படிதலின் துவக்கம் ஆகும். இது கீழ்ப்படிதலின் விளைவு அல்ல. இது கீழ்ப்படிதலுக்கு அப்பாற்ப்பட்டதும் அல்ல... நாம் தேவனுக்கு கீழ்ப்படிகிறோம் ஏனென்றால் அவர் நம்மை நேசிக்கிறார், ஏனென்றால் அவர் நம்மை அவருக்காக நியமித்திருக்கிறார், ஏனென்றால் அவர் நம்மை உருவாக்கியிருக்கிறார், ஏனென்றால் நாம் பள்ளத்தாக்கை கடக்கும்போதும், வனாந்திரத்தைக் கடக்கும்போதும், ஒவ்வொரு வெற்றியின் போதும் நம்முடன் இருக்கிறார். அதனால், கீழ்ப்படிதல் என்பது உறவின் அடிப்படையில் வருவது, நிபந்தனையின் அடிப்படையில் வருவதல்ல.
>
> – Dr. ஜோயல் சி. ஹண்டர்

நாம் என்ன சொல்ல வருகிறோம் என்று பார்த்தால், பழைய ஏற்பாட்டு உடன்படிக்கைகளில் தேவப்பற்றின் பரீட்சைகள் எவ்வாறு தோன்றுகின்றன என்பதை நாம் சுருக்கமாக சொல்லுகிறோம். அதன் பிறகு, புது உடன்படிக்கையில் தேவப்பற்றின் பரீட்சைகள் பற்றி நாம் பார்க்கலாம். பழைய ஏற்பாட்டிலிருந்து தொடங்கலாம்.

## பழைய ஏற்பாடு

ஆதாமை தேவனுடைய உடன்படிக்கையின் பிரதிநிதியாக அவருடைய வழிமுறைகள் மூலமாக ஏதேன் தோட்டத்தில் தேவன் பரீட்சித்தார் என்பதை வேதத்தை நன்றாக அறிந்த ஒவ்வொருவரும் அறிவர். அனைத்து மனித இனத்தையும் ஆதாமிற்குள்ளாக அவருடைய உடன்படிக்கையின் ஜனங்களை தேவப்பற்றிற்காக தேவன் அழைத்தார் என்பதை நாம் அறிவோம்.

ஜலப்பிரளயத்துக்கு முன்பும் அதன் பிற்பாடும் அவருடைய உடன்படிக்கையின் பிரதிநிதியாக தேவனுடைய வழிமுறைகள் மூலமாக நோவாவும் பரீட்சிக்கப்பட்டார். நோவாவில் தேவன் தம்முடைய உடன்படிக்கை மக்களின் இருதயங்களைத் தொடர்ந்து சோதித்தார் – மீண்டுமாக, முழு மனித இனத்தையும் அப்படியே சோதித்துப் பார்த்தார் என்று வேதம் குறிப்பிடுகிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆபிரகாமுடைய வாழ்க்கைக் கதைகள் முற்பிதாக்களின் பற்றை எண்ணற்ற வழிகளில் அவருடைய உடன்படிக்கையின் பிரதிநிதியாக எவ்வாறு தேவன் பரீட்சித்தார் என்பதை விளக்குகின்றன. இதற்கு உதாரணமாக, ஆபிரகாம் தன்னுடைய குமாரனாகிய ஈசாக்கைப் பலியிடும்படி கட்டளை பெற்றதிலிருந்து தேவன் ஆபிரகாமைப் பரீட்சித்தார் என்பதை ஆதியாகமம் 22:1-19 வெளிப்படையாக நமக்குச் சொல்கிறது. ஆதியாகமம் 22:12 இல், தேவதூதன் ஆபிரகாமிடம்:

> நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக்கொடுத்தபடியினால் நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் (ஆதியாகமம் 22:12).

தேவன் ஏன் ஆபிரகாமுக்குக் கட்டளையிட்டார் என்பதை இந்தப் பகுதியில் நாம் காணலாம். அவர் ஆபிரகாமுடைய இருதயத்தின் உண்மையான நிலையை நிரூபிக்கும்படியாக பரீட்சித்தார்.

அதே வழியில், அவருடைய உடன்படிக்கை ஜனங்களான இஸ்ரவேல் ஜனங்களும் மற்ற புறஜாதியாரும் இஸ்ரவேலர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களின் தேவப்பற்றை ஆபிரகாமிற்குள்ளாக தேவன் பரீட்சித்தார் என்று வேத வாக்கியங்கள் கற்பிக்கின்றது.

இஸ்ரவேல் மக்களின் உடன்படிக்கையின் பிரதிநிதியாக மோசேயும் தன்னுடைய வாழ்நாள் முழுவதிலும் தேவனுடைய கட்டளைகளால் பரீட்சிக்கப்பட்டார். மேலும் தேவன் அவருடைய உடன்படிக்கையின் ஜனங்களாகிய இஸ்ரவேல் ஜனங்களைப் பரீட்சிக்கும்படியாக அவர்களுக்குச் சட்டங்களைக் கொடுத்தார் என்பதை தேவன் வெளிப்படையாக விவரித்தார். உபாகமம் 8:2 இல் மோசே ஜனங்களிடம் சொல்வதைக் கவனிக்க:

> உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிறுமைப்படுத்தும்படிக்கும், தம்முடைய கட்டளைகளை நீ கைக்கொள்வாயோ கைக்கொள்ளமாட்டாயோ என்று அவர் உன்னைச் சோதித்து, உன் இருதயத்திலுள்ளதை நீ அறியும்படிக்கும், உன்னை இந்த நாற்பது வருஷமளவும் வனாந்தரத்திலே நடத்திவந்த எல்லா வழியையும் நினைப்பாயாக (உபாகமம் 8:2).

அதிகமாக அதே வழியில், தாவீதின் வாழ்க்கைக் கதைகளும் தேவன் இஸ்ரவேலர்களின் ராஜரீக உடன்படிக்கையின் பிரதிநிதியாக தாவீதின் தேவப்பற்றை பரீட்சித்தார் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. தேவன் அவருடைய உடன்படிக்கையின் ஜனங்கள், தாவீதின் புத்திரர் மற்றும் இஸ்ரவேல் தேசம், அவர்களுடைய சந்ததி முழுவதுமாக தொடர்ச்சியாக பரீட்சித்தார் என்று பழைய ஏற்பாட்டின் மீதியான பகுதிகள் மீண்டும் மீண்டுமாக விளக்குகிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பழைய ஏற்பாட்டு உடன்படிக்கைகளில் தேவப்பற்றிற்கான தேவனுடைய பரீட்சைகளை பற்றி சொல்லிக் கொண்டே, புது உடன்படிக்கையில் தேவன் அவருடைய ஜனங்களின் தேவப்பற்றை எவ்வழிகளில் பரீட்சித்தார் என்பதை ஆராய்ந்து பார்க்கலாம்.

## புது உடன்படிக்கை

வேதாகம வரலாற்றில் இதற்கு முன் இல்லாத அளவிற்கு தேவனுடைய கிருபையானது புதிய உடன்படிக்கையில் ஊற்றப்பட்டிருப்பதை நாம் காணலாம். புதிய ஏற்பாடு தேவனிடமிருந்து எண்ணற்ற கட்டளைகள் மற்றும் விதிமுறைகளை கொண்டுள்ளது என்பது இன்னும் தெளிவாகிறது. இது ஏன் உண்மையாயிருக்கிறது? ஏனென்றால், பழைய உடன்படிக்கையைப்போல, புது உடன்படிக்கையும் தேவப்பற்றிற்கான பரீட்சைகளை அவசியப்படுத்துகிறது.

இதன் காரணமாக, புதிய உடன்படிக்கையின் பிரதிநிதியாக கிறிஸ்துவினுடைய தேவப்பற்றின் மீது மிக அதிக கவனத்தை புதிய ஏற்பாடு தருகிறது. ராஜ்யத்தின் துவக்கத்தின் போது, தேவன் இயேசுவிடமிருந்து அவசியப்படுத்தின தேவப்பற்றின் அனைத்து பரீட்சைகளையும் வெற்றியுடன் கடந்து வந்தார் என்று புதிய ஏற்பாடு சொல்கிறது. எபிரெயர் 4:15 இல் நாம் வாசிக்கிறோம்:

> எல்லாவிதத்திலும் நம்மைப்போல் – சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார் (எபிரெயர் 4:15).

பிலிப்பியர் 2:8 இல் கிறிஸ்துவின் குறிப்பிட்டுச்சொல்லத்தக்கதான கீழ்ப்படிதலை பவுல் ஒப்பிட்டுச்சொல்லியிருப்பதைக் கவனிக்க:

> அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி – தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலிப்பியர் 2:8).

புதிய ஏற்பாட்டு இறையியலில், தேவனிடத்தில் இயேசுவினுடைய தேவப்பற்றின் உயரம் என்பது சிலுவையில் அவர் தன்னைத்தானே மரணத்துக்கு ஒப்புக்கொடுத்தது ஆகும். ஆனால் கீழ்ப்படிதலின் இந்தச் செயல் ஏன் மிகவும் விசேஷமானது?

பாவம் இந்த உலகத்தில் நுழைந்தது முதல், தேவன் தன்னுடைய உடன்படிக்கையின் ஜனங்கள் பலியிடும் மிருகங்களின் இரத்தத்தினாலே பாவநிவர்த்திக்கான தற்காலிக விதிகளை ஏற்படுத்தினார். ஆனால் எபிரெயர் 10:1-14 நமக்கு கற்பிக்கிறபடி, இந்த பலிகளால் தேவனுடைய வெற்றியுள்ள ராஜ்யத்தின் நிரந்தரமான, இறுதியான மன்னிப்பைப் பெற்றுத்தர இயலவில்லை. அதனால், இஸ்ரவேலின் சிறையிருப்பு நெருங்கினபோது, ஏசாயா 53:1-12 இல் அவருடைய ஜனங்களின் பாவத்திற்குப் பரிகாரமாக,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கர்த்தருடைய ஊழியக்காரனாகிய, மேசியாவினுடைய தன்னார்வ மரணம் அவசியம் என்று தேவன் வெளிப்படுத்தினார். அவருடைய மரணத்தினால், ராஜரீக உடன்படிக்கையின் பிரதிநிதி தேவனுடைய ஜனங்களை அவருடைய நித்திய வெற்றியுள்ள ராஜ்யத்தின் மகிமைக்குள் கொண்டு செல்லுவார். இயேசு தன்னைத்தானே சிலுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்து அவருடைய துவக்க காலத்திலேயே இந்த பங்கை நிறைவேற்றினார். நாம் இதை மத்தேயு 8:17; அப் 8:32-33; ரோமர் 6:10; மற்றும் 1 பேதுரு 2:22-25 ஆகிய வேத பகுதிகளில் காணலாம். புது உடன்படிக்கையின் பிரதிநிதியாக தேவப்பற்றிற்கான பரீட்சைகளை வெற்றியாக கடந்து வந்ததினால், இயேசு நிரந்தரமான பரிகாரம் மற்றும் நித்திய மன்னிப்பை அவரை விசுவாசிக்கும் அனைவருக்கும் வழங்கினார்.

இயேசுவின் சிலுவை மரணத்தோடு கூட, கிறிஸ்து, தாவீதின் குமாரனாக, தொடர்ச்சியான அவருடைய ராஜ்யத்தின் வழியாக, பரலோகத்தில் கீழ்ப்படிதலுடன் ஊழியம் செய்து வருகிறார் என்று எபிரெயர் 8:1-2 போன்ற பகுதிகள் சுட்டிக்காட்டுகின்றன. மேலும் எல்லாவற்றிற்குமான முடிவு வரும்போது கிறிஸ்து தன்னுடைய மகிமையிலே மறுபடி வரும்போது, தாழ்மையின் செயலாக ராஜ்யத்தை பிதாவாகிய தேவனிடம் கொடுப்பார் என்று 1 கொரிந்தியர் 15:24 கற்பிக்கிறது.

இப்பொழுது, புதிய ஏற்பாட்டு இறையியல் புது உடன்படிக்கையின் பிரதிநிதியாக கிறிஸ்துவின் பூரணமான தேவப்பற்றை எவ்வளவாக வலியுறுத்துகிறதோ, அதுபோல, தேவப்பற்றிற்கான பரீட்சைகள் புதிய உடன்படிக்கையின் ஜனங்களிடத்தில், சபையில் இன்னும் விளைவுகளை ஏற்படுத்துகிறது என்பதை இது அழுத்திக்கூறுகிறது.

ஒருமுறை கூட, கிறிஸ்துவுடனான சபையின் ஐக்கியத்தின் அடிப்படையில் சபைக்கான தேவப்பற்றின் பரீட்சைகளைப் புரிந்துகொள்வதற்கு இது உதவுகிறது. ஒரு பக்கம், சபையானது “கிறிஸ்துவுக்குள்” உள்ளது என்பது கிறிஸ்துவுடன் நம்மை தேவனுக்கு முன்பாக அவருடைய பரலோக நீதிமன்றத்தில் அடையாளப்படுத்துகிறது. 1 தீமோத்தேயு 3:16 இன் படி, கிறிஸ்து ஒருவரே தேவப்பற்றின் பரீட்சையை பூரணமாக கடந்தவர் மற்றும் பரிசுத்த ஆவியானவர் மரித்தோரிலிருந்து அவரை எழுப்பினபோது அது நிரூபிக்கப்பட்டது. இதன் காரணமாக, ரோமர் 4:23-25 போன்ற பகுதிகள், கிறிஸ்துவின் இந்த சட்டபூர்வமான நிரூபணம் அவர்மீது இரட்சிப்பின் விசுவாசம் வைத்திருக்கும் அனைவருக்கும் பரலோக நீதிமன்றத்தில் கணக்கில் கொள்ளப்படுகிறது என்று கற்பிக்கிறது. கிறிஸ்து நமது சார்பாக பரீட்சையைக் கடந்து வந்ததன் காரணமாக, கிறிஸ்துவுக்குள் உண்மையான விசுவாசிகள் அனைவரும் இந்த பரீட்சையில் வெற்றியடைந்ததாக நியாயந்தீர்க்கப்படுகிறார்கள். தேவனுடைய பரலோக நீதிமன்றத்தில் கிறிஸ்துவைப் பற்றினதான இந்த அதிசயமான உண்மையானது புதிய ஏற்பாட்டு இறையியல் பார்வையின் அடிப்படையாகும்;



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சீர்திருத்த இறையியலாளர்கள் இதனை *“விசுவாசம் மட்டுமே”,* அல்லது விசுவாசத்தினால் மட்டுமே நீதிமானாக்கப்படுதல் என்று அழைக்கிறார்கள்.

மற்றொரு பக்கம், எப்படியாயினும், கிறிஸ்துவுடனான ஐக்கியமானது “கிறிஸ்து நமக்குள் இருக்கும்” அன்றாட அனுபவத்தை ஒப்பிடுகிறது. மகிமையிலே கிறிஸ்து வருவதற்கு முன்பதாக சபையானது இன்னும் பூமியில் இருக்கும் போதே, சபையிலுள்ள ஜனங்கள் அவர்களுடைய இருதயத்தின் நிலையை நிரூபிக்கும் விதமாக தேவப்பற்றிற்கான பரீட்சையை அனுபவிக்கிறார்கள். மேலும் கிறிஸ்துவின் ஆவியானவர் நம்மை பரிசுத்தமாக்கும் விதமாக உண்மையான விசுவாசிகளுக்கிடையே கிரியை செய்துகொண்டிருக்கிறார். கிறிஸ்துவுடனான இந்த ஐக்கியத்தின் பக்கமானது பாரம்பரிய சீர்திருத்த உபதேசமான பரிசுத்தமாக்கப்படுதல், அல்லது பரிசுத்தத்திற்கான முற்போக்கு நோக்கத்தை ஒத்துப்போகச்செய்கிறது. மேலும் பரீட்சிக்கப்படுதல் என்பது பரிசுத்தமாக்கப்படுதலில் தேவன் நம்மை முன்னோக்கி நடத்துவதற்கான ஒரு வழி என்று வேதவாக்கியங்கள் கற்பிக்கின்றன. யாக்கோபு 1:2-3 சொல்வதுபோல:

> என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள் (யாக்கோபு 1:2-3).

இப்பொழுது, ஒருமுறைகூட, நாம் நினைவில் கொள்ள வேண்டியது என்னவென்றால் கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தின் துவக்கம் மற்றும் தொடர்ச்சியின் போது, காணக்கூடிய சபை, உண்மையான மற்றும் கள்ள விசுவாசிகளை உள்ளடக்கியுள்ளது. மேலும் தேவப்பற்றின் பரீட்சைகள் மூலமாக இரண்டு பிரிவினரும் தாங்கள் இரட்சிப்பின் விசுவாசத்தை கொண்டிருப்பவர்களா இல்லையா என்பதை வெளிப்படுத்துகிறார்கள். கள்ள விசுவாசிகள் தேவப்பற்றிற்கான பரீட்சையில் தோல்வியடைந்து கிறிஸ்துவை சேவிப்பதிலிருந்து பின்திரும்புகிறார்கள். முரண்பாடாக, உண்மையான விசுவாசிகள், இந்த வாழ்க்கையிலே பூரணராக இல்லாதிருந்தும், ஆவியானவரின் வல்லமையினாலே கிறிஸ்துவினிடத்தில் அவர்களுடைய தேவப்பற்றை விடாதிருக்கிறார்கள். 1 யோவான் 2:19 இல் கள்ள விசுவாசிகளைக் குறித்து நாம் வாசிக்கின்றபடி:

> அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்துபோனார்கள், ஆகிலும் அவர்கள் நம்முடையவர்களாயிருக்கவில்லை. நம்முடையவர்களாயிருந்தார்களானால் நம்முடனே நிலைத்திருப்பார்களே; எல்லாரும் நம்முடையவர்களல்லவென்று வெளியாகும்படிக்கே பிரிந்துபோனார்கள் (1 யோவான் 2:19).

இந்த பத்தி குறிப்பிடுவது போல, புதிய ஏற்பாட்டு இறையியல் உண்மை விசுவாசிகளின் சரீரமாகிய சபையில் உள்ளவர்களின் தேவப்பற்றை நிரூபிக்க விசுவாசத்தின் சோதனைகளாக தேவனிடமிருந்து பல கட்டளைகளைக் கொண்டுள்ளது.

> இயேசு கிறிஸ்து காட்டிக்கொடுக்கப்படப்போகின்ற அந்த இரவில், அவர் புதிய உடன்படிக்கையைத் துவக்கி வைக்கிறார். மேலும், மற்ற எல்லா உடன்படிக்கையைப் போலவே, இந்த ஒன்றும் பரஸ்பர அர்ப்பணிப்பு மற்றும் பரஸ்பர கடமைகளை ஈடுபடுத்துகிற ஒன்றாக உள்ளது. மேலும் இந்த அதிசயமான உடன்படிக்கையின் முதன்மையான அர்ப்பணிப்பு என்பது அவருடைய சித்தம் மற்றும் அவருடைய வழிகளுக்குக் கீழ்ப்படிவதற்காக, அவருடைய உண்மையான கர்த்தத்துவத்தின் கீழ் நம்முடைய பட்டயங்களை அர்ப்பணிக்கும்படியாக, நம்பத்தகுந்த வழியில் வாழ்ந்துகாட்டும்படியாக, இவ்வுலகத்தில் தேவனுடைய இருதயத்தைப் பின்பற்றுவதற்காக நம்முடைய விருப்பம் மற்றும் இருதயம் இரண்டையும் மாற்றிக்கொண்டு இயேசு கிறிஸ்துவினுடைய கர்த்தத்துவத்திற்கு அர்ப்பணிப்பது ஆகும். ஆனால் இங்கு சேர்க்கப்பட வேண்டிய மிகவும் அவசியமான காரியம் என்னவென்றால் நம்முடைய உடன்படிக்கையின் கடமைகளின் இன்றைய நிறைவேறுதல்கள் எல்லாம் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை மற்றும் பிரசன்னத்தினால் நாம் வாழ்ந்து காட்டுகின்ற நிறைவேறுதல்களே. மேலும் பரிசுத்த ஆவியானவர் அந்த கீழ்ப்படிதலின் நிலையை மாற்றியமைக்கிறார் மற்றும் அனுதின கடமைகளுக்கு மேலாக சிறந்ததாக மேம்படுத்துகிறார், வேதவாக்கிய மொழியில், இந்த உடன்படிக்கை பரஸ்பர மகிழ்ச்சியைக் கிடைக்கச் செய்கிறது. நம்மைக் காண்கிறவர் நம்மில் மகிழ்ச்சி அடைகிறார், நாம் அவரிலும் மகிழ்ச்சியடைகிறோம். மேலும் தேவனுடைய ராஜ்யமானது அன்றாட கடமைகளை உடையதல்ல, ஆனால் பரிசுத்த ஆவியானவருக்குள் கிடைக்கும் நீதி, சமாதானம் மற்றும் சந்தோஷம் நிறைந்தது என்று அப்போஸ்தலன் ஏன் சொன்னார் என்ற எண்ணத்தை இது நமக்கு தருகிறது. இந்த கடமைகள் நாம் நம்முடைய கர்த்தரிடத்தில் பற்றுள்ளவர்களாகவும், உண்மையுள்ளவர்களாகவும் இருப்பதற்காக காணப்படுகிறது; இதை நாம் தயக்கத்துடன் அல்ல, ஆர்வத்துடனும், முழு இருதயத்துடனும் நிறைவேற்ற

> வேண்டும் ஏனெனில் அவர் நம் அனைவரையும் வென்றுவிட்டார். மற்றும் நாம் அவரையும் அவரது வழிகளையும் மகிழ்ச்சி நிறைந்ததாகக் கண்டிருக்கிறோம்.
>
> – Dr. கிளன் ஜி. ஸ்கோர்கி

இப்பொழுது தேவனுடைய தெய்வீக இரக்கம் மற்றும் தேவப்பற்றின் பரீட்சைகள் தொடர்பாக புது உடன்படிக்கையின் ஆற்றல்மிக்க பரிமாற்றங்களைப் பார்த்தோம், நாம் மூன்றாவது அங்கத்தைப் பற்றிக் காணலாம். கீழ்ப்படிதலுக்கும் மற்றும் கீழ்ப்படியாமைக்கும் வரும் விளைவுகளாக அதன் ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களைப் பற்றி சோதித்துப் பார்ப்போம்.

## விளைவுகள்

முன்பதாக நாம் கொண்டிருந்த விவாதங்களுடன் சேர்த்து தேவனுடனான உடன்படிக்கையில் கீழ்ப்படியாமைக்கும் மற்றும் கீழ்ப்படிதலுக்குமான விளைவுகள் குறித்துப் பார்க்கலாம். நாம் சுருக்கமாக பழைய ஏற்பாட்டு உடன்படிக்கைகள் மற்றும் புது உடன்படிக்கையை ஆய்வு செய்வோம். முதலாவதாக நாம் பழைய ஏற்பாட்டு உடன்படிக்கையின் விளைவுகளான ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்கள் பற்றிப் பார்க்கலாம்.

### பழைய ஏற்பாடு

புது உடன்படிக்கைக்கு முன்பதாக, ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களின் விளைவுகள் என்பது, தேவனுடைய உடன்படிக்கையின் பிரதிநிதிகள், மற்றும் மொத்த உடன்படிக்கையின் ஜனங்களுடன் அவருடைய தொடர்பைக் குறித்த முக்கிய பரிமாணமுடையதாய் இருந்தது. இப்போது, நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, தேவன் பெரும்பாலும் தனது உடன்படிக்கைகளின் விதிமுறைகளை மனித புரிதலுக்கு அப்பாற்பட்ட வழிகளில் செயல்படுத்தினார். ஆகவே, வேதாகமத்தில் தேவன் அடிக்கடி புரிந்துகொள்ள முடியாத வழிகளில் அவரது உடன்படிக்கைகளின் ஆசீர்வாதங்களையும் சாபங்களையும் வேகப்படுத்தி, அதிகரித்து, குறைத்து, தாமதப்படுத்தி, ரத்து செய்தார். ஆனால் அவர் எப்போதும் தனது பரிபூரண ஞானத்துக்கும் நன்மைக்கும் ஏற்ப அவ்வாறு செய்தார்.

அஸ்திபாரங்களின் உடன்படிக்கையில் தேவன் தனது உடன்படிக்கை பிரதிநிதியான ஆதாமின் கீழ்ப்படியாமைக்கு பதிலளிக்கும் விதமாக துன்பத்தாலும் மரணத்தாலும் சபித்தார். ஆனால், ஆதாமை தேவன் ஆசீர்வதித்ததையும் நாம் காண்கிறோம். ஆதியாகமம் 3:15 இல், சர்ப்பத்தின் வித்துக்கு எதிராக மனிதகுலம் பெறும் வெற்றியை தேவன் வாக்குத்தத்தமாக அளித்தார். தேவன் பொருத்தமாகக் கண்டது போல, இந்த மரண சாபம் மற்றும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வெற்றியின் நம்பிக்கை ஆகிய இரண்டும் ஆதாம் பிரதிநிதித்துவப்படுத்திய உடன்படிக்கை மனிதர்களான மனித இனத்திற்கு கடத்தப்பட்டது.

இயற்கையின் ஸ்திரத்தன்மை உடன்படிக்கையில், உடன்படிக்கை பிரதிநிதியான நோவா தனது உண்மையுள்ள சேவைக்காக ஆசீர்வாதங்களைப் பெற்றார். ஆனால் ஜலப்பிரளயத்திற்குப் பிறகு தனது குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சனைகள் போன்ற சாபங்களையும் அவர் தொடர்ந்து எதிர்கொண்டார். இதேபோன்ற ஆசீர்வாதங்களும் சாபங்களும் நோவா பிரதிநிதித்துவப்படுத்திய உடன்படிக்கை மக்களான எதிர்கால தலைமுறைக்கும் வந்தன.

இஸ்ரவேலுடைய தெரிந்தெடுத்தலின் உடன்படிக்கையில், தேவனுடைய உடன்படிக்கை பிரதிநிதியான ஆபிரகாம் ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களின் விளைவுகளைப் பெற்றார். இந்த விளைவுகள் இஸ்ரவேலின் உடன்படிக்கை மக்களுக்கும் அடுத்தடுத்த தலைமுறைகளில் இஸ்ரவேலர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களுக்கும் வழங்கப்பட்டன.

இதேபோல், பிரமாண உடன்படிக்கையில், மோசே தனது வாழ்க்கையில் உடன்படிக்கை பிரதிநிதியாக தேவனுடைய ஆசீர்வாதங்களையும் சாபங்களையும் பெற்றார். கூடுதலாக, மோசேயின் பிரமாணம் இஸ்ரவேல் மற்றும் இஸ்ரவேலர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்ட புறஜாதி உடன்படிக்கை மக்களுக்கு பல குறிப்பிட்ட ஆசீர்வாதங்களையும் சாபங்களையும் கூறியது.

ராஜ்ய உடன்படிக்கையில், உடன்படிக்கை பிரதிநிதியான தாவீது உண்மையுள்ளவராகவும் உண்மையற்றவராகவும் இருந்ததால் ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களின் விளைவுகளைப் பெற்றார். அவர் பிரதிநிதித்துவப்படுத்திய உடன்படிக்கை மக்களுக்கும், அவருடைய அரச சந்ததியினருக்கும், இஸ்ரவேலர்களுக்கும் இஸ்ரவேலர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்ட புறஜாதி மக்களுக்கும் இது பொருந்தும்.

பழைய ஏற்பாட்டு உடன்படிக்கைகளில் உள்ள ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களின் விளைவுகள் குறித்து சுருக்கமாகப் பார்த்துள்ளோம். கிறிஸ்துவில் புது உடன்படிக்கையுடன் தொடர்புடைய கீழ்ப்படிதல் மற்றும் கீழ்ப்படியாமையின் விளைவுகள் பற்றி புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் கற்பித்ததற்கு இவை களம் அமைத்தன.

## புது உடன்படிக்கை

புது உடன்படிக்கையின் பிரதிநிதியாக கிறிஸ்து தேவனுடைய சாபங்களையும் ஆசீர்வாதங்களையும் அனுபவித்தார் என்பதை புதிய ஏற்பாட்டு இறையியல் வலியுறுத்துகிறது. கலாத்தியர் 3:13 இல் பவுல் சுட்டிக்காட்டியபடி, சிலுவையில் மரித்தபோது தன்னை விசுவாசிக்கிற அனைவரின் பாவங்களுக்காகவும் இயேசு தேவனுடைய சாபத்தை சகித்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இயேசு தனது சொந்த தோல்விகளால் தேவனுடைய சாபத்திற்கு ஆளாகவில்லை. அவரிடம் தனிப்பட்ட பாவங்கள் எதுவும் இல்லை. ஆனால் ஏசாயா 53:1-12 நிறைவேறும்படியாக, ஒவ்வொரு யுகத்திலும் வாழ்ந்த தேவனுடைய மக்களுக்கு ஒன்றுமறியாத ஒரு அரச பதிலாளாக தேவனின் நியாயத்தீர்ப்பை அனுபவித்தார். இருப்பினும், இதற்கு மாறாக, அவருடைய தனிப்பட்ட நீதியின் காரணமாக, கிறிஸ்து தேவனுடைய ஆசீர்வாதங்களையும் பெற்றார். தேவனைச் சிறப்பாகச் சேவித்தார். அவரின் நித்திய ஆசீர்வாதங்களின் வெகுமதிக்கு தகுதியான ஒரே மனிதர் இயேசு மட்டுமே.

பிலிப்பியர் 2: 8-9 இல் கிறிஸ்துவின் கீழ்ப்படிதலுக்கும் தேவனுடைய ஆசீர்வாதத்திற்கும் உள்ள தொடர்பைக் கவனியுங்கள்:

> [கிறிஸ்து] மரணபரியந்தம், அதாவது சிலுவையின் – மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவரானார். ஆகையால், தேவன் அவரை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தி, எல்லா நாமத்திற்க்கும் மேலான நாமத்தை அவருக்குக் கொடுத்தார் (பிலிப்பியர் 2: 8-9).

புதிய ஏற்பாட்டு இறையியலில், ராஜ்யத்தின் துவக்கத்தில் இயேசுவின் உயிர்த்தெழுதல் மற்றும் பரம் ஏறுதல் ஆகியவை தேவனுக்குக் கீழ்ப்படிந்ததற்கு கிடைத்த நியாயமான வெகுமதியாகும். பிதாவின் வலது பாரிசத்தில் இருந்து சிருஷ்டிப்பு முழுவதையும் ஆளும்போது இயேசு தம்முடைய ராஜ்யத்தின் தொடர்ச்சியாக தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெறுகிறார். புது சிருஷ்டிப்பின் மீது ஆட்சி செய்வதற்கான நித்திய சுதந்தரத்தைப் பெறும்போது, அவருடைய ராஜ்யத்தின் நிறைவில் அவர் இன்னும் ஆசீர்வதிக்கப்படுவார்.

புதிய ஏற்பாட்டு இறையியல் எல்லா சிருஷ்டிப்புகளையும் ஆளும் ஆசீர்வாதத்தைப் பெற்றதற்காக இயேசுவைப் புகழ்கிறது, மேலும் புது உடன்படிக்கையின் விளைவுகள் புது உடன்படிக்கையின் மக்களான சபையையும் பாதிக்கிறது என்பதை நாம் அறிவோம்.

கிறிஸ்துவுடனான ஐக்கியத்தின் புதிய ஏற்பாட்டுக் கோட்பாடு இந்த யதார்த்தத்தின் இரண்டு பக்கங்களை மீண்டும் சுட்டிக்காட்டுகிறது. ஒருபுறம், நாம் ”கிறிஸ்துவில்” இருப்பதால், தேவனுடைய ஒவ்வொரு நித்திய ஆசீர்வாதமும் ஏற்கனவே உண்மையான விசுவாசிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. உண்மையான விசுவாசிகள் தேவனுடைய நித்திய சாபத்தை ஒருபோதும் அனுபவிக்க மாட்டார்கள் என்பதில் நம்பிக்கையுடன் இளைப்பாற முடியும். கிறிஸ்து அவர்களின் உடன்படிக்கை பிரதிநிதி என்பதால் அவர்களின் நித்திய ஆசீர்வாதங்கள் பாதுகாப்பாக இருக்கின்றன.

பவுல் தனது நன்கு அறியப்பட்ட தேவ புகழ்ச்சி பாடலை எபேசியர் 1:3 இல் எழுதியபோது இந்த கருத்தை மனதில் வைத்திருந்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார். (எபேசியர் 1:3).

பரலோகத்தில் கிறிஸ்துவுடன் நாம் அடையாளம் காணப்பட்டுள்ளதால், உண்மையான விசுவாசிகள் ஏற்கனவே ”ஒவ்வொரு ஆவிக்குரிய ஆசீர்வாதத்தையும்” பெற்றுள்ளனர். கிறிஸ்து நமக்கு பதிலாக தேவனுடைய நித்திய சாபங்களை சுமந்ததைப் போலவே, அவர் நம் சார்பாக பிதாவிடமிருந்து நித்திய ஆசீர்வாதங்களின் வெகுமதியையும் பெற்றார்.

மறுபுறத்தில், கிறிஸ்துவுடனான நமது ஐக்கியம் என்பது கிறிஸ்து நம்மில் இருக்கிறார் என்பதாகும். அதாவது, அவர் உண்மையான விசுவாசிகளில் கிரியை செய்கிறார், இதனால் அவர்கள் அன்றாட வாழ்க்கையில் கீழ்ப்படிதல் மற்றும் கீழ்ப்படியாமையின் விளைவுகளை அனுபவிக்கிறார்கள்.

கிறிஸ்து மகிமையில் திரும்பும் வரை,காணக்கூடிய சபையில் தவறான விசுவாசிகளும் உண்மையான விசுவாசிகளும் காணப்படுவார்கள் என்பதை இப்போது மீண்டும் நினைவில் கொள்ள வேண்டும். புதிய ஏற்பாட்டு இறையியல் இந்த வாழ்க்கையிலும் நித்தியத்திலும் ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களின் விளைவுகள் இந்த இரு குழுக்களுக்கும் எவ்வாறு பொருந்தும் என்பதை விளக்குகிறது.

லூக்கா 12:45-46 மற்றும் ரோமர் 2:4-5 போன்ற பகுதிகள் கள்ள விசுவாசிகள் தொடர்ந்து தேவனுக்கு எதிராகக் கலகம் செய்கையில், இந்த வாழ்க்கையில் அவர்கள் பெறும் ஆசீர்வாதங்கள் இறுதித் தீர்ப்பில் அவர்களுக்கு எதிரான தேவனுடைய நித்திய சாபங்களை அதிகரிக்கும் என்பதை விளக்குகின்றன. இந்த வாழ்க்கையில் அவர்கள் அனுபவிக்கும் கஷ்டங்களும் சாபங்களும் கிறிஸ்து திரும்பி வரும்போது அவர்கள் பெறும் நித்திய சாபங்களின் முன்னுகர்வு மட்டுமே.

இதற்கு மாறாக, உண்மையான விசுவாசிகள் இந்த வாழ்க்கையில் ஆசீர்வாதங்களையும் சாபங்களையும் பெறுகிறார்கள். ஆனால் இந்த வாழ்க்கையில் உண்மையான விசுவாசிகள் பெறும் ஆசீர்வாதங்கள் ராஜ்யத்தின் முடிவில் வரும் நித்திய ஆசீர்வாதங்களின் முன்னுகர்வுகள் ஆகும். உண்மையான விசுவாசிகளுக்கு, எபிரெயர் 12:1-11 போன்ற பகுதிகள் நமக்குச் சொல்வது போல், தற்காலிக கஷ்டங்கள் அல்லது சாபங்கள் தேவனுடைய அன்பான, தகப்பனின் சிட்சையாகும். இந்த கஷ்டங்கள் நம்மை பரிசுத்தப்படுத்துகின்றன, மேலும் கிறிஸ்து திரும்பி வரும்போது நமக்குக் கிடைக்கும் நித்திய ஆசீர்வாதங்களை அதிகரிக்கவும் செய்கின்றன. வெளிப்படுத்தின விசேஷம் 21: 6-8 இல் நாம் வாசிக்கும்போது, தேவன் இவ்வாறு கூறுகிறார்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன் ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான். பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் – அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 21:6-8).

அந்த நாளில், புது உடன்படிக்கை சபையில் கள்ள விசுவாசிகள் நித்திய தீர்ப்புக்கு ஒப்புக் கொடுக்கப்படுவார்கள். ஆனால் உண்மையான விசுவாசிகள் மகிமையான சிருஷ்டிப்பில் தங்கள் நித்திய சுதந்தரத்தைப் பெறுவார்கள்.

> கடைசி நியாயத்தீர்ப்புக்குப் பிறகு தேவனுடைய மக்கள் பெறும் ஆசீர்வாதங்களைப் பார்க்க விரும்பினால், உலகத்தின் முடிவில் உள்ள புதிய சிருஷ்டிப்பின் இந்த அற்புதமான உருவத்தை காண நாம் வெளிப்படுத்துதல் 21 மற்றும் 22 க்கு செல்வோம். வெளிப்படுத்தின விசேஷம் 21 மற்றும் 22 இல் உள்ள புது சிருஷ்டிப்பைப் பற்றிய இந்த விளக்கத்தை நான் விரும்புகிறேன், ஏனென்றால் இது ஆதியாகமத்திலுள்ள தோட்டத்தை மறுபரிசீலனை செய்வது, தோட்டத்திற்கு திரும்புவது மட்டுமல்ல. இது உண்மையில் தோட்டத்தின் விரிவாக்கம் ஆகும். இது வல்லமையுள்ளது. ஏதேனை விட சிறந்ததாக இருக்கும். ஆகையால் ஏதேனில், ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தேவனின் கீழ் ஆட்சி செய்வதற்கும், தோட்டத்தை பராமரிப்பதற்கும், பூமியைக் பார்த்துக்கொள்வதற்கு ஒரு பொறுப்பு இருந்தது. புது சிருஷ்டிப்பில் நாமும் அது போல செய்வோம், அதுவே நம் ஆசீர்வாதம். ஆனால் நாம் ஒருபோதும் பாவம் செய்ய மாட்டோம். ஆதாமும் ஏவாளும் பாவம் செய்பவர்களாக இருந்தார்கள். புது சிருஷ்டிப்பில், தேவனுடைய ஜனங்கள் ஒருபோதும் விலகிப்போவதில்லை. ஏதேனில் இயேசு இல்லை, உடல் ரீதியாகவும் அவர் அங்கு இல்லை. புது சிருஷ்டிப்பில் இயேசு இருப்பார். ஆகவே தேவனுடைய ஜனங்களாகிய புது உடன்படிக்கையின் மக்கள் பெறும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆசீர்வாதம், உண்மையில் ஒரு புது சிருஷ்டிப்பு ஆகும். இது இந்த உலகம் அறிந்த எதையும் விட சிறந்தது.

– Dr. ஸ்டீபன் ஈ. விட்மர்

## முடிவுரை

கிறிஸ்துவின் புது உடன்படிக்கை பற்றிய இந்தப் பாடத்தில், தேவனுடைய ராஜ்ய நிர்வாகத்தை நாம் கருத்தில் கொண்டுள்ளோம், மேலும் தேவன் தனது உடன்படிக்கை பிரதிநிதிகள் மூலம் தனது ராஜ்யத்தை எவ்வாறு நிர்வகித்தார் என்பதையும், அவருடைய உடன்படிக்கைகள் இயல்பாக வளர்ந்ததால் அவர் எவ்வாறு பொருத்தமான கொள்கைகளை நிறுவினார் என்பதையும் பார்த்தோம். தேவனுக்கும் அவருடைய உடன்படிக்கை மக்களுக்கும் இடையிலான தொடர்புகளின் இயக்கவியல் அவரது தெய்வீக தயவு, விசுவாசத்தின் சோதனைகள் மற்றும் கீழ்ப்படிதல் மற்றும் கீழ்ப்படியாமைக்கான விளைவுகள் ஆகியவற்றை எவ்வாறு உள்ளடக்கியது என்பதையும் நாம் ஆராய்ந்து பார்த்தோம்.

புதிய ஏற்பாட்டை இன்னும் முழுமையாகப் புரிந்துகொள்ள முற்படுகையில், கிறிஸ்துவின் புது உடன்படிக்கை புதிய ஏற்பாட்டு இறையியலின் ஒரு சிறிய பகுதி மட்டும் அல்ல என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். தேவன் தனது ஜனங்களுடனான கடைசி உடன்படிக்கைகளின் கடைசியாக புது உடன்படிக்கை புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் எழுதிய அனைத்தையும் ஆழமாக பாதித்தது. புது உடன்படிக்கையின் மூலம் கிறிஸ்துவில் உள்ள தம் ஜனங்களுடன் தேவன் ஒரு உறுதியான ஒப்பந்தம் செய்தார். இந்த புது உடன்படிக்கையைப் பற்றி நாம் எவ்வளவு அதிகமாக புரிந்துகொள்கிறோமோ, அவ்வளவு சிறப்பாக புதிய ஏற்பாட்டு இறையியலின் மிக முக்கியமான அம்சங்களை நம்மால் காண முடியும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.